பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 21, வியாழக்கிழமை 05.01.2017 | கதிர் 61

## அம்பாந்தோட்டையில் சீனப் படைத் தளமா? அரசு மறுப்பு!

கொழும்பு, ஜன.05

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனா தனது இராணுவத்தளம் ஒன்றை நிறுவ முயற்சிக்கின்றது எனக் கூறப்படும் செய்தியை அரசு அடியோடு மறுத்துள்ளது.

சில தரப்புகள் இவ்வாறு வதந்திகளைப் பரப்ப எத்தனிக்கின்றன என்றும் – பக்கம் 20

# போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதியும் அவசியம்

## நல்லிணக்க கலந்தாலோசனை செயலணி விவரமான பரிந்துரை

### அறிக்கையை ஏற்க ஜனாதிபதி, பிரதமர் வரவில்லை



கொழும்பு, ஜனவரி 05

+போர்க்குற்றங்கள், சித்திரவதை, பாலியல் வல்லுறவு, காணாமலாக்கப்பட்டோர் உள்ளிட்ட மனித உரிமை மீறல் குற்றங்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்படக்கூடாது.

+இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கும் உள்நாட்டு பொறிமுறையில் கலப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அத்துடன் அதன் ஒவ்வோர் அமர்விலும் குறைந்தது சர்வதேச நீதிபதி ஒருவர் இடம்பெற வேண்டும்.

- இவ்வாறு நல்லிணக்க பொறிமுறை பற்றிய கலந்தாலோசனைச் செயலணி தனது இறுதி அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான கருத்தறியும் செயலணியின் அறிக்கை நேற்று முன்தினம் ஜனாதிபதிசெயலகத்தில் வைத்து அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையிலேயே கலப்பு நீதிமன்றம் மற்றும் சர்வ பக்கம் 19

## யுத்தக் குற்ற விசாரணை பழி வாங்கும் நோக்கமல்ல!

### நீதி தேடுவதுதான் என்கிறார் சம்பந்தர்

கொழும்பு, ஜன.05

யுத்தத்தின்போது கட்டளைகளை வழங்கியவர்களேயுத்தக் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும். நாம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைக் கோரி நிற்கின்றோமே தவிர பழி வாங்க முயற்சிக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம் பக்கம் 19

## சர்வதேச நீதிபதிகள் என்ற கேள்விக்கே இடமில்லை என்பதில் அரசு திட்டவட்டம்

கொழும்பு, ஜன.05

பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கும் பொறிமுறையில் எக்காரணம் கொண்டும் சர்வதேச நீதிபதிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரட்ண இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் ராஜித தொடர்ந்து கூறும்போது தெரிவித்தவை வருமாறு:-

நீதி வழங்கும் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உட்சேர்ப்பதற்கு எந்தவிதமான சாத்தியங்களும் இல்லை. இதனை நாங்கள் ஐ.நா. மனித உரிமை பக்கம் 19

## அரசமைப்புக்கான வழிகாட்டல் குழு இன்று கூடுகின்றது

கொழும்பு, ஜன.05

புதிய அரசமைப்பைத் தயாரிப்பது தொடர்பான அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் கூட்டம் இன்று கொழும்பில் இடம்பெறுகின்றது.

புதிய அரசமைப்பைத் தயாரிப் பதற்காக முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புச்சபையாக பக்கம் 19

## மிக ஸ்திரமான நிலையில் அரசு!

### உறுதிபடக் கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஜன.05

நல்லாட்சி அரசு மிகவும் ஸ்திரமான நிலையில் இருக்கின்றது. அரசில் எந்த ஸ்திரமற்ற நிலைமைகளும் காணப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற 'பலம்மிக்க இலங்கை' என்ற தொனிப் பொருளின் ஊடான அரசின் பொருளாதார பக்கம் 19

## கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பயந்திருந்தாராம் மஹிந்தர்!

### அமைச்சர் ராஜித வெளியிடும் தகவல்

கொழும்பு, ஜன.05

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மீது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒருவித பயம் கொண்டிருந்தார் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பக்கம் 19

## பிராந்திய விமான நிலையமாக பலாலி விரைவில் தரமுயரும்!

கொழும்பு, ஜன.05

இலங்கைக்கு மட்டுமல்ல தென்னிந்தியாவுக்கும் பயன் தரும் விதத்தில் பிராந்திய விமான நிலையமாக பலாலி விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பில் நேற்று நல்லாட்சி அரசின் உத்தேச அபிவிருத்தித் திட்ட நோக்குப் பற்றிய ஆவணத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தைத் தரமுயர்த்துதல் மற்றும் தென்னிந்தியாவுடனான தொடர்பாடல் வசதிகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் கொழும்புக்கான புதிய இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவின் பக்கம் 19

அளப்பு அருணாசலம்



அண்ணன் – தம்பி ரெண்டு பேருக்கும் தாங்கள் பயந்திருந்ததை உவர் மறந்திட்டார் போலை...!

## ரணில் நாட்டில் இருக்கும்போதுதான் ஆட்சியைக் கவிழ்ப்பாராம் மஹிந்த!


### தான் முதுகில் குத்துபவர் அல்லர் என்கிறார்

"நான் முதுகில் குத்துபவன் அல்லன். ஆகவே, ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு செல்லும் போது ஆட்சியைக் கவிழ்க்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அவர் நாட்டில் இருக்கும்போதே அதைச்செய்வேன்." பக்கம் 19

காலைக்கதிர் Kalaikkathir



# இந்திய நிதி உதவித் திட்டங்களை பார்வையிட்டார் இந்திய உயரதிகாரி





யாழ்ப்பாணம், ஜன.05

உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத்துறைஅமைச்சின் இணைச் செயலாளர் சஞ்சய் பாண்டா, யாழ். இந்தியத் துணைத் தூதர் ஆர்.நடராஜனுடன் யாழ்ப்பாணத்தில் இந்திய நிதியுதவியுடன் தற்பொழுது நடைபெற்று வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

கீரிமலை நகுலேஸ்வரத்தில் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை நேற்று மாலை அவர்கள் சென்று பார்வையிட்டனர். அந்த வீடுகளில் ஒன்றை நாடா வெட்டி உத்தியோகபூர்வமாகப் பயனாளியிடம் அவர்கள் கையளித்தனர்.

அதைத் தொடர்ந்து மாலை 4.30 மணியளவில் துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகை தந்த அவர்கள் இந்திய நிதியுதவியில்மீள்புனரமைக்கப்பட்டமைதானத்தையும் பார்வையிட்டனர்.

யாழ். நூலகத்துக்கும் புல்லுக்குளத்துக்கும் இடையில் அமைக்கப்பட்டுவருகின்ற கலாசார மையத்துக்கும் அவர்கள் சென்று அங்கு நடைபெறும் கட்டுமானப் பணிகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

அவர் கச்சதீவிற்குச் சென்று அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தைப் பார்வையிடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ–10)

# கிழக்குக் கடலில் இரு படகுகள் தத்தளிக்கின்றன எனத் தகவல்

## *தேடப்படும் ஒலுவில் மீனவர்களுடையவையா?*

இலங்கையின் கிழக்குக் கடற்பரப்பில் இரண்டு படகுகள் தத்தளித்துக்கொண்டிருக்கின்றன என கடற்றொழில் அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீனவர்களின் இரண்டு படகுகளே எரிபொருளின்றி கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என கடற்றொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒலுவில் துறைமுகத்திலிருந்து கடலுக்குச்சென்றமீனவர்களின் படகுகளாக அவை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஒலுவில் துறைமுகத்திலிருந்து கடந்த 24 ஆம் திகதி கடலுக்குச் சென்ற மீனவர்கள் ஆறு பேர் கரைக்குத் திரும்பவில்லை என அந்த மீனவர்களின் உறவினர்களால் கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை – காணாமற்போன மீனவர்கள் தொடர்பில் அனைத்துக் கடற்படைப் படகுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி கூறினார்.

இதுதொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

# மாணவி வித்தியா கொலை வழக்கு: சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.05

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட 10ஆவது சந்தேக நபரின் விளக்கமறியலை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

புங்குடுதீவில் மாணவி வித்தியா கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 12 நபர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் 2015ஆம் ஆண்டு டிசெம்பர் 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட 10ஆவது எதிரியான கலகே பேபிகே கமகே ராஜ்குமார் என்ற நபரின் விளக்கமறியலுக்கு கடந்தடிசெம்பர்மாதத்துடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது.

இதனால் சந்தேக நபரின் விளக்க மறியல் காலத்தை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்குமாறு அரச சட்டத்தரணி நிசாந்த் நீதிமன்றில் மனு ஒன்றை முன்வைத்தார்.

இதனையடுத்து சந்தேகநபர் நீதிமன்றில் தனது கருத்தைத் தெரிவிக்கையில் –

'நான் இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கவில்லை. சம்பவம் நடைபெற்ற தருணத்தில் நான் காரைநகரிலுள்ள வர்த்தக நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தேன்.

வித்தியாவின் 45ஆம் நாள் நினைவுதினத்தைப்பார்வையிடுவதற்காகவே அங்குசென்றேன். அத்தருணத்திலேயே புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டேன்.

இன்று நீதிமன்றில் வழக்கு உள்ளது என்பது எனக்கு தெரியாது. சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் நான் வினவிய போதும் அவர்கள் இது தொடர்பில் எனக்கு அறிவிக்கவில்லை. அதனால் சட்டத்தரணிக்கோ எனது வீட்டாருக்கோ வழக்குத் தொடர்பில் நான் தெரியப்படுத்தவில்லை.

எனவே விளக்கமறியலை இரண்டு மாதம் அல்லாமல் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

வழக்கை விசாரித்த நீதிபதி இளஞ்செழியன் சந்தேக நபரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதுடன் விளக்கமறியலை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடித்து பெப்ரவரி 2ஆம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# ஜாஎல பகுதியில் காணி நிரப்பல்: ஜனாதிபதி தலையீட்டால் தடை!

கொழும்பு, ஜன.05

ஜாஎல – தண்டுகம பகுதியில் இரு இடங்களில் சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த காணி நிரப்பல் செயற்பாடுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய உடனடியாக நிறுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

காணி நிரப்பல் தொடர்பில் பிரதேச மக்களால் நேற்று முன்தினம் ஜனாதிபதிக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து அந்த இடத்துக்குச்சென்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

அதற்கமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலர்கள் மற்றும் காணி மீட்பு, அபிவிருத்திக் கூட்டுத்தாபன அலுவலர்கள் ஜாஎல பொலிஸாருடன் நேற்று அந்த இடத்துக்குச் சென்று அத்துமீறிய காணி நிரப்பல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தினர்.

முத்துராஜவல கண்டல் தாவர சுற்றாடல் கட்டமைப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தி பெருமளவான நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த சட்டவிரோத தாழ்நில நிரப்பலை மேற்கொண்டோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுற்றாடல் மற்றும் உயிர்ப் பன்மைத்துவத்துக்குப் பாதிப்பு ஏற்படக்கூடியவாறு மேற்கொள்ளப்படும் இவ்வாறான அனுமதியற்ற காணிநிரப்பல் நடவடிக்கைகளுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களுக்கமைய உயர்ந்தபட்ச தண்டனைகளை வழங்குமாறு இதற்கு முன்னரும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

# வவுனியா புளியங்குளத்தில் முதிரை மரக் கடத்தல் முறியடிப்பு



வவுனியா, ஜன.05

வவுனியா புளியங்குளத்தில் முதிரை மரக் கடத்தலை முறியடித்த பொலிஸார் அதுதொடர்பாக இருவரைக் கைதுசெய்தனர்.

வவுனியா புளியங்குளம் பழையவாடிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


வவுனியா புளியங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் புளியங்குளம் பொலிஸ்நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரணசிங்க, தலைமையில் கான்ஸ்டபிள் ஜெயசூர்ய, ஏக்கநாயக்க, நிஹால், ஜெயசிங்க ஆகியோர் அடங்கிய குழு பழையவாடி காட்டில் வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட 23 முதிரை மரங்களைக் கைப்பற்றியது.

இக்கடத்தலில் சம்பந்தப்பட்ட இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இன்று வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட முதிரை மரங்கள் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியுடையவை என்பது குறிப்பிடத்தக்கது.

# போருக்கு முன்னரான காலத்தில் இருந்த சிறந்த சுகாதார சேவை இப்போது இல்லை!

## *மாகாண சுகாதார அமைச்சர் கவலை*





போருக்கு முன்னரான காலத்தில் வடக்கில் வைத்தியர்களும் சுகாதார ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர் எனவும் மக்களிடமிருந்து கிடைத்த ஆதரவும் வலுவான நிலையில் காணப்பட்டதால் சிறந்த சுகாதார சேவையை வழங்கக்கூடியதாக இருந்ததெனவும் குறிப்பிட்டுள்ள வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தற்போது அவ்வாறான ஒரு நிலை இல்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு – தேவிபுரம் பகுதியில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியின் கீழ் அமைக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தை நேற்று முன்தினம் திறந்துவைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கிலுள்ள சுகாதார தேவையானது ஏனைய பிரதேசங்களை விட அதிகமானதெனக் குறிப்பிட்ட அவர் அவற்றை நிவர்த்திப்பதற்கு ஆளணி பற்றாக்குறை பெரும் தடையாக உள்ளதென்றும் நிதியொதுக்கீடும் போதுமானதாக இல்லையென்றும் குறிப்பிட்டார்.

யுத்தத்தால் அங்கவீனமடைந்த மற்றும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக வடக்கில் வாழ்கின்றனர் என சுட்டிக்காட்டிய அமைச்சர் இவர்களின் நலன் கருதி பல புதிய சுகாதார திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

# முன்னாள் போராளிகளின் நிலைமை; ஜனாதிபதியுடன் பேசுவாராம் மாவை

முன்னாள் போராளிகளின் அவலவாழ்வுநிலைமைகுறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தாம் பேசி, அந்த நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடிவெடுப்பார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா எம்.பி. தெரிவித்திருக்கின்றார்.

முன்னாள் போராளியான இனியவனின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரியில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட மாவை சேனாதிராசா முன்னாள் போராளிகள், மக்களுடன் கலந்துரையாடினர். அப்போதே அவர் மேற்கண்ட விடயத்தைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்றைய கால கட்டத்தில் முன்னாள் போராளிகள் பலர் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எமது நாட்டுக்குச் செய்த தியாகத்தை நாம் எவரும் மறந்து விட முடியாது. இந்த அவல நிலையில் இருந்து அவர்களுக்கு உடனடி மாற்றம் வேண்டும்.

இந்த அரசாங்கம் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களைத் தமது உறவினர்களிடம் ஒப்படைக்கும் பொழுது கொடுத்த வாக்குறுதிகளான பாதிக்கப்பட்ட போராளிகளுக்கு புனர்வாழ்வு திட்டம், அடிப்படை வசதிகள், அவர்களுக்கான வீடு, கல்விமற்றும்சுகாதாரவசதிகள், மாற்றுத்திறனாளிகள், மன நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ உதவிகள், தொழில்வாய்ப்புகளை பெற்றுச் கொடுத்தல் ஆகியவற்றை சரியானமுறையில்செய்திருந்தால் இன்று நாம் இவர்களை இழக்க வேண்டிய தேவை ஏற்பட்டு இருக்காது. நாம் பலமுறை இதற்கான விண்ணப்பங்களை எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் தெரிவித்து இருந்தோம்.

ஆனால், இன்றுவரை ஒரு சரியான தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. நாளை ஜனாதிபதியுடன் நான் நேரில் சென்று சந்திப்பை மேற்கொள்ளவுள்ளேன். அப்பொழுது இதற்கான தீர்வை உடனடியாகச் செய்து தரும்படி அவர்களிடம் எமது கட்சி சார்பாகவும் முன்னாள் போராளிகள் சார்பாகவும் கோரிக்கையை முன் வைப்பேன். - எனக் கூறினார்.

## நெடுந்தீவு மக்களுடன் சிறிதரன் எம்.பி. சந்திப்பு





யாழ்ப்பாணம், ஜன.05

யாழ். நெடுந்தீவுப் பகுதிக்கு கடந்த திங்களன்று விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அங்குபல்வேறுதரப்பினரையும்சந்தித்துக்கலந்துரையாடினார். அங்குள்ள நிலைமைகளையும் பார்வையிட்டார்.

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் புனரமைக்கப்பட்டுள்ள வடக்குறாவெளிக்குளம், நெடுந்தீவு வைத்தியசாலை ஆகியனவற்றைப் பார்வையிட்ட அவர் பொதுமக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நெடுந்தீவு பிரதேசத்தின் தேவைகள் குறித்தும் வசதிகள் குறித்தும் பல கோரிக்கைகளை முன் வைத்து அவருடன் உரையாடினர்.

# உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகள் முடக்கம்

கொழும்பு, ஜன. 05

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு நேற்று நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

'மிக்' விமானக் கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு அனுமதி தரவேண்டும் என்று கோரி நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் கொழும்பு நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவினரின் கோரிக்கையைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம், உதயங்க வீரதுங்கவுக்கு இலங்கையில் உள்ள அனைத்து வங்கிக் கணக்குகளையும் முடக்குமாறு நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 2006ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் உதயங்க வீரதுங்க ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றியிருந்தார்.

## போதைவஸ்துடன் 2 பெண்கள் கைது

கொழும்பு,ஜன.05

சீதுவபகுதியில்ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த இரு பெண்களை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து சீதுவ நோக்கிச் சென்ற கொண்டிருந்த முச்சக்கர வண்டியைத் தடுத்து சோதனைக்கு உட்படுத்திய போதே இந்தப் பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்கள் 32 மற்றும் 34 வயதுடையவர்கள்எனவும், இவர்கள் நீர்கொழும்பு மற்றும் மிஹிரியான பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையர்கள் சென்ற கப்பல் நியூஸிலாந்தில் தடுத்து வைப்பு!

கொழும்பு,ஜன.05

இலங்கையர்கள் சென்ற கப்பல் ஒன்று நியூஸிலாந்து கடற்பரப்பில் வைத்து, வனுவாட்டு சுங்க அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கப்பலின் தோற்றத்தை அடையாளம் காணத் தவறியமையாலேயே அந்தக் கப்பல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் இருந்து கடல் மார்க்கமாக வருகை தந்த கப்பலே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

ஐந்து மாலுமிகள் மற்றும் கப்டன் உள்ளிட்டவர்கள் அந்தக் கப்பலில் பயணித்துள்ளனர். அவர்கள் ஆங்கிலம் பேசக் கூடியவர்கள் என்றும் சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கப்பலை புதிய உரிமையாளரிடம் ஒப்படைப்பதற்காக தாம் செல்கின்றனர் என்று மாலுமிகள் குறிப்பிட்டுள்ளனர். அந்தக் கப்பல் 20 வருடங்கள் பழைமையானது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# 20 ஆயிரம் வேலை வாய்ப்புகள் புதிய திட்டத்தில் வருகின்றன

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.05

எதிர்வரும் 8 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பல வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ள நிலையில், சுமார் இருபதாயிரம் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



குளியாப்பிட்டியவில் வாகன உற்பத்திச்சாலைக்கான அடிக்கல் நடும் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி மற்றும் பிரதமர்உட்படபல அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதில் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த 20 ஆயிரம் வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கையில் நாம் திருப்திப்படவில்லை. பல்லாயிரக்கணக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கவே நாம் விரும்புகின்றோம்.

2020 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் வறுமையிலிருந்து விடுபடும் நாடாக மாற்றமடையும் என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# மொழிபெயர்ப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.05

சாகித்ய ரத்னா அதிவண சு.ஜெபநேசனால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட இலங்கையின் பிரபல நாவலாக விளங்கும் எழுத்தாளர் கே.டானியலின் 'கானல்' நாவலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதனும் மதிப்பீட்டுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் ஆற்றுவர். நூலின் முதற் பிரதியை சட்டத்தரணி சர்மினி விக்கினேஸ்வரன் பெற்றுக் கொள்வார். (ஐ-21-32)

## வடமராட்சி ஆலயங்களில்..

வடமராட்சி,ஜன.05

பருத்தித்துறை புலோலி மத்திய வாலா அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பொங்கல் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

புலோலி, மந்திகை கண்ணகை அம்மன் கோவிலில் எதிர்வரும் திங்கட்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

அன்றைய தினம் காலை விசேட பூஜைகள் நடைபெற்றதும் திருவாசக முற்றோதல் ஆரம்பமாகும். புலோலிப் பதியைச் சேர்ந்த அடியார்கள் ஒன்றிணைந்து திருவாசக முற்றோதலை மேற்கொள்கின்றனர். (இ-30)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.05

நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையின் வேலுப்பிள்ளை மண்டபத் திறப்பு விழா நிகழ்வுகள் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.சிவநேசனும் கலந்து கொள்வர். (இ)

# நாவற்குழியில் சிங்களவருக்கு வருகின்றன பொருத்து வீடுகள்

யாழ்ப்பாணம்,ஜன.05

யாழ். நகரின் நுழைவாயிலான நாவற்குழியில் திட்டமிட்டு குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்களுக்கு மீள் குடியேற்ற அமைச்சின் வீடுகள் கிட்டவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 340 வரையிலான சிங்களவர்கள் மஹிந்த ஆட்சிக் காலத்தில் வாகனங்களில் ஏற்றிவரப்பட்டு வீடமைப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் நாவற்குழியில் குடியமர்த்தப்பட்டனர்.

பின்னர் சிங்கள மதவாத அமைப்புக்களால் படிப்படியாக நிரந்தர கல்வீடுகள் அமைத்து வழங்கப்பட்டதுடன் விகாரையும் அமைத்து குடியேற்றத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விசேட அதிரடிப்படை மற்றும் படையினர் உடைய இரு முகாம்கள் அப்பகுதியினுள் அமைக்கப்பட்டு 24 மணிநேர பாதுகாப்பும் வழங்கப்பட்டுவருகின்றது.

இந்த நிலையில் நிரந்தர வீடுகள் கிட்டியிராத எஞ்சிய குடியேற்றவாசிகளுக்கே வடக்கு, கிழக்கில் யுத்த பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களுக்கென ஒதுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ்பொருத்துவீடுகளை அமைத்து வழங்க ரணில் அரசு முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் தற்போது சிங்களக் குடியேற்ற வாசிகளில் பொருத்து வீடுகள் தேவையானோர் விவரங்கள் கோரப்பட்டுள்ளன என்று தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## நல்லாட்சி அரசின் தத்துவம்

நல்லாட்சி அரசின் கீழ் விடயங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை அம்பலப்படுத்துவதற்கு, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் அசோக பீரிஸ் வெளியிட்டிருக்கும் தகவல் போதுமானதாக இருக்கும் எனலாம்.

நாட்டில் உள்ள 335 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எப்போதோ முடிந்துவிட்டது. நாட்டில் உள்ள அனைத்து மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் அனைத்தும் விசேட ஆணையாளர்களினால் இப்போது நிர்வகிக்கப் படுகின்றன.

இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைலேயே நாடாளுமன்றம், மாகாணசபைகளுக்கு அடுத்தது உள்ளூராட்சி நிர்வாக முறைமையாகும். அதற்குரிய ஜனநாயக வாய்ப்புரிமை இந்த நாட்டில் மறுக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. கொழும்பு மாநகரசபை, யாழ்ப்பாணம் மாநகரசபை போன்றவற்றின் ஆயுட்காலம் கூட சட்டத்தில் வழங்கப்பட்ட அனைத்துக் கால நீடிப்பும் வழங்கப்பட்டு, கடைசியாகக் காலாவதியாகிவிட்டது.

ஒட்டு மொத்தத்தில் உள்ளூராட்சிக்கான ஜனநாயக ஆட்சி முறைமை கட்டையில் ஏறி கனகாலமாகிவிட்டது.

நாடு முழுவதிலும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், தேர்தலில் மக்களைச் சந்திக்க அஞ்சும் நல்லாட்சி அரசு, அதனால் தேர்தலை நடத்தப் பின்னடிக்கின்றது. இந்தத் தேர்தலை நடத்தினால், தென்னிலங்கை கீழ்தட்டு மக்கள் மத்தியில் இன்னும் செல்வாக்கு மிக்கவராகத் திகழும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பரிவாரங்களும், புனர்ஜென்மம் எடுத்து அரசியலில் விஸ்வரூப சக்திகளாக மீள எழுந்துவிடுவார்களோ என்று அரசுத்தரப்பு அஞ்சுகின்றது. அதனால் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் அது இழுத்தடிக்கப் பார்க்கின்றது.

எனினும், தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் பொறுப்பைத் தான் ஏற்காமல் பழியைப் பிறர் மீது போடுகிறது அது. அதனை அரசு நியமித்த எல்லை மீளாய்வு ஆணைக்குழுவின் தலைவர் அசோக பிரீஸ் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

உள்ளூராட்சித் தேர்தல் நடைமுறைகள் தொடர்பாகப் புதிய ஏற்பாடுகளைக் கொண்டதான சட்டம், முன்னைய ஆட்சிக் காலத் திலேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது. அந்த சட்டப்படியே உள்ளூராட்சித் தேர்தல் இனி நடத்தப்பட வேண்டும். ஒரு தொகுதியில் அல்லது வட்டாரத்தில் முதலாவதாக வருபவரை தெரியும் முறையையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை யும் கலந்ததான ஓர் ஏற்பாடு அது.

அந்த வகையில், தேர்தலை நடத்துவதானால் உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் அவற்றின் வட்டாரங்கள் தொடர்பான எல்லைகளை மீளாய்வு செய்து அதனை வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும்.

அதன்படி, எல்லை நிர்ணயத்துக்கான ஆணைக்குழுவை நியமித்து விட்டு, தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்க முயன்று வருகின்றது நல்லாட்சி அரசு.

எல்லை நிர்ணய ஆணைக்குழு தேவையின்றி காலதாமம் செய்து, தனது பணியைப் பூர்த்தி செய்யாமல் காலத்தை இழுத்தடிக்கின்றது என்றும், அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தல்கள் தாமதம் ஆகின்றன என்றும் அரசுத் தரப்பால் குற்றம் சுமத்தப்பட்டு வந்தது.

இப்போது, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் உண்மையைப் போட்டுடைத்திருக்கிறார்.

"எங்களை இந்தப் பணிக்கு நியமித்து மூன்று மாத காலத்தில் இறுதி அறிக்கை தரவேண்டும் என்றார்கள். அது சாத்தியமற்றது. கடந்த ஜூலையிலாவது அதனை ஒப்படைக்க நாம் இலக்கு வைத்தோம்.

"எங்கள் பணியை விரைந்து பூர்த்திசெய்யத் தேவையான தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் எங்களுக்கு வழங்கப்படவில்லை. டிசெம்பர் 27 ஆம் திகதி எங்கள் அறிக்கை முற்று முழுதாகத் தயார். ஆனால், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குரிய விடயங்களும் இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. முக்கியமான அந்த; தமிழ் மாவட்டங்களுக்குரிய விடயங்களைத் தமிழில் உள்ளடக்காமல் எப்படி எங்களால் அறிக்கையை வெளியிட முடியும்?" - என்று கேள்வி எழுப்பிய அவர், அதற்கு அப்பாலும் ஒரு விடயத்தைப் போட்டுடைத்திருக்கின்றார்.

"நாங்கள் ஜூலையை இலக்கு வைத்து செயற்பட்டோம். ஆனால், உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் எங்களை தாமதப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். விடயத்தை இன்னும் சில மாதங்களுக்கு இழுத்தடிக்கும்படி எங்களிடம் கூறிவிட்டு, ஊடகங்களிடம் தாங்கள் இந்தப் பணியை விரைந்து முடிக்கும்படி அழுத்தம் கொடுக்கின்றார்கள் என்று அவர் கூறினார். இது தான் பிணக்கின் ஆரம்பம். நாங்கள் அமைச்சருடன் முரண்பட விரும்பவில்லை. ஆனால், அவர்களின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் நாங்கள் தாமதப்படுத்துகின்றோம் என வாதிடுகின்றார்" - என உண்மையை அம்பலப்படுத்தியிருக்கின்றார் ஆணையாளர்.

எல்லை நிர்ணயக் குழுவை, அதன் பணியைத் தாமதப்படுத்தும்படி கூறிவிட்டு, மறுபுறம் அந்தக் குழுவின் தாமதத்தால்தான் தேர்தலை நடத்தமுடியாமல் இருக்கின்றது என்று கதை விடுகின்றார் சம்பந்தப்பட்ட அமைச்சர். இது தான் நல்லாட்சியின் தத்துவமோ...?




# யாழ். வாசிகள் ஒரு லட்சம் பேர் இந்தியாவில் தற்போது தஞ்சம்

லண்டன் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவரிடம் யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு லட்சம் பேர் இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் இலங்கைக்கான லண்டன் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் லோர்ட் நெசபியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்திருந்த இலங்கைக்கான லண்டன் அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுத் தலைவர் லோர்ட் நெசபி நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனை யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுமார் ஒரு மணித்தியாலம் நீடித்த இந்தச் சந்திப்பின் போது, யாழ்.மாவட்டத்தில் பொது நிலைமைகள் மற்றும் அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஆராய்ந்தார்.

அத்துடன், கல்வி, விவசாயம், சுகாதாரம், உட்பட மீள் குடியேற்றங்கள், இலங்கையில் இருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

அதன்போது யாழ்.அரச அதிபர் தெரிவித்தவை வருமாறு:

ஓர் இலட்சத்துக்கும் அதிகமான அகதிகள் இந்தியாவில் இருக்கின்றார்கள். தற்போது



அவர்கள் இங்கு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளை, மீள்குடியேற்றம் தற்போது செய்யப்பட்டு வருகின்றது எனவும், அண்மையில் இந்தியாவில் இருந்து 900 குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளன .

அதே வேளை, யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் சூழ்நிலைகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். (எ)

# பணம் கொள்ளையடிக்கும் அதிகாரிகளைத் தண்டிக்கவும்

வட. மாகாணக் கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.05

விழாக்கள் என்ற போர்வையில் கொடையாளர்களிடம் பணம் கொள்ளையடிக்கும் அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று வடமாகாணக் கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு;

"வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்களும், வாழ்வாதார உதவிகளும் உரிய அமைச்சுகளுக்கு ஊடாக முறையாக வழங்கப்படுகின்றன.

மேலும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற பிரமாண அடிப்படையிலான நிதிகூட உரிய திணைக்களங்களுக்கு ஊடாகப் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது.

இவற்றை நாம் அனைவரும் அறிந்தவர்களாக உள்ளோம்.

ஆனால் வடக்கு மாகாணத்தில் மக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் அவர்களின் நிலைகளை அறிந்து பேருதவி புரிகின்ற பெருங்கொடையாளர்களிடம் கல்வி அமைச்சுக்கு உட்பட்ட சில அதிகாரிகள் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று, அவற்றைத் தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

அது மட்டுமன்றி எவ்வித அனுமதியும் இல்லாமல் அவற்றைச் செலவுசெய்து சீரழிப்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேலும், வடமாகாணக்கல்வி அமைச்சக்கு எம்மால் முறைப்பாடு செய்யப்படுள்ளவை தொடர்பாக விசாரணை செய்து உரியவர்களுக்கு தண்டனை வழங்கி, இனிமேல் அத்தகைய சம்பவங்கள் நிகழாமல் தடுக்க வேண்டும் என்றும் அது கேட்டுள்ளது.

இதற்கான தீர்ப்பு உரிய முறையில் வழங்கப்படாத விடத்து அந்த அதிகாரிகளை நீதிமன்றம் கொண்டுசெல்ல நேரிடும் என்றும் சங்கம் எச்சரித்துள்ளது.

அதுமட்டுமன்றி கொடையாளர்கள் மிகவும் அவதானத்துடன் தமது நன்கொடைகளை வழங்கவேண்டும் என்றும் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.''-என்றுள்ளது. (எ)

## நாளை

06.01.2017
வெள்ளிக்கிழமை
திதி : அட்டமி முற்பகல் 9.23 வரை.
நட்சத்திரம்: ரேவதி பிற்பகல் 1.06 வரை
சுபநேரம் : 06.31 – 8.01
இராகுகாலம் : 11.01 – 12.31

# சீனாவுக்கு அம்பாந்தோட்டையில் காணி; இந்த விவகாரத்தில் பெரும் சந்தேகம்!

## மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்கிறார் முன்னாள் சபாநாயகர் சமல்

கொழும்பு, ஜன.05

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் உள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீன நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பிலான ஒப்பந்தம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன என்று கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கண்டியில் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரின் செயலாளரைச் சந்தித்து கலந்துரையாடிய டளஸ் அழகபெரும, சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் தொடர்பிலான மகஜர் ஒன்றையும் மகாநாயக்க தேரரிடம் கையளித்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமல்ராஜபக்ஷ, இந்த ஒப்பந்தம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களைப் பொது மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் உள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீன நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பிலான ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இதுதொடர்பில் அமைச்சரவைக்கோ, மாகாண சபைகளுக்கோ எதுவும் தெரியாது. இதுதொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

துறைமுக அமைச்சருக்கும் இது தொடர்பில் தெளிவில்லை. அதுபோல் அமைக்கப்படும் தொழிற்சாலை என்னவென்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். அது தொடர்பிலும் சந்தேகம் காணப்படுகின்றது. சீன நிறுவனம் வழங்கும் நிதியின் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்த முடியுமா என்பது தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டைத் துறைமுகம் எதிர்காலத்தில் எவ்வாறு பயன்படப்போகின்றது என்பது முக்கியம்.

இவ்வாறான வேலைத்திட்டங்கள் அவசியம். இதற்கு முன்னர் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் வேறு ஒப்பந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இனதுறைமுக நிறுவனம், சைனா மேர்சன்ட் போர்ட் நிறுவனம் மற்றும் துறைமுக அதிகார சபை ஆகியன இணைந்து ஓர் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அது மிகவும் பயனுள்ள ஓர் ஒப்பந்தம். 35 வீதம் துறைமுக அதிகார சபைக்கும் மீதம் சீன நிறுவனத்துக்கும் என்ற அடிப்படையிலேயே அந்த ஒப்பந்தம் செய்யப்படவிருந்தது. எனினும் தற்போதைய ஒப்பந்தத்தின்படி 20 வீதம் மாத்திரமே துறைமுக அதிகார சபைக்கு இலாபமாகக் கிடைக்கின்றது.



முகாமைத்துவ அதிகாரங்கள் எதுவும் எமக்கில்லை. அதுபோல் வழங்கப்பட்டுள்ள காணி தொடர்பிலும் பிரச்சினை காணப்படுகின்றது. தவணை முறையில் இலாபம் கிடைக்குமா? அல்லது ஒருதடவை வழங்கப்படும் நிதியா 99 வருடங்களுக்கும் என்ற கேள்வி எழுகின்றது. ஆகவே, இது தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியம். குறைபாடுகள் காணப்படுமாயின் அதனைப் பேசித் தீர்மானித்துக்கொள்ள முடியும்.- என்றார். (ஐ)

## கோப்பாயில் கலந்துரையாடல்

கோப்பாய்,ஜன.05

வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலக பிரிவு மட்டத்திலான இந்த வருடத்துக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டுவிழா தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலகத்தில் பதிவு செய்த மற்றும் மீள் ஒழுங்குபடுத்தல் செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் சார்பில் நிர்வாகிகள் இருவரை கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)



செ.கஜானனின் ''வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல் கவிதை நூல் வெளியீடு அண்மையில் பளைப் பிரதேச சபை மண்டபத்தில் வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது. முதற் பிரதியை ஐடியல் நிறுவன அதிபர் தி.கஜன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார். (ஐ - 10)

## யாழில் சிங்கள மொழி பேசும் பொலிஸாரை தகாத வார்த்தையால் பேசிய இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜன.05

சிங்கள மொழி பேசும் பொலிஸாரை தகாத வார்த்தையால் பேசிய யாழ். இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்.குருநகர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

பிரதஸ்தாப இளைஞர் யாழ். பஸ்தியன் சந்திப் பகுதியில் இளைஞர்களுடன் நின்றுள்ளார்.

அப்போது, சிங்கள மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அந்த இடத்தில் நின்றபோது, அந்த இளைஞர் பொலிஸ் உத்தியோகத்தருக்கு தமிழ் மொழி தெரியாதென நினைத்து தகாத வார்த்தையால் பேசியுள்ளார்.

இதேவேளை, அவர் பேசிய தகாத வார்த்தைகளைப் புரிந்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர், பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கியதுடன், இளைஞரை கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிக் சென்றனர்.

# சாரதிகள் ஏழு பேருக்கு ரூ.65 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.05

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிகள் ஏழு பேருக்கு 65 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் கடந்த திங்கட்கிழமை இந்த அபராதத்தை விதித்தார்.

அதில் இரு சாரதிகளின் சாரத்திய அனுமதிப் பத்திரத்தை நான்கு மாதங்கள் இரத்து செய்ததுடன் மேலும் மூன்று சாரதிகளுக்கு 150, 150 மற்றும் 100 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுத்த கட்டளை பிறப்பித்தார்.

புதுவருட தினத்தன்றும் அதற்கு முதல் நாளும் அச்சுவேலி பொலிஸ் பிரதேசத்தில் மதுபோதையில் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிகள் அச்சுவேலி போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எந்தவித பத்திரமும் இன்றி மதுபோதையில் அபாயகரமான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு தலா 16ஆயிரம் ரூபா அபராதமும் 150 மணித்தியால சமுதாய சீர்திருத்த கட்டளையும் விதிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் மதுபோதையில் அபாயகரமான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய, நீர்வேலி, கரவெட்டி, சாவகச்சேரி, பகுதிகளைச் சேர்ந்த நால்வருக்குத் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதில் இருவரின் சாரத்திய அனுமதிப்பத்திரத்தை 4மாதங்கள்தடுத்து வைக்க கட்டளை பிறப்பித்தார் நீதிவான்.


பொலிஸ்கட்டளையை மீறியமை, தலைக்கவசம் அணியாமை மற்றும் காப்புறுதி, வருமான வரிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய புத்தூர் பகுதியைச் சேர்ந்தவருக்கு 9 ஆயிரம் ரூபா அபராதமும் 100 மணித்தியால சீர்திருத்தம் வழங்கவும் உத்தரவிடப்பட்டது. எதுவித பத்திரமும் இன்றி செலுத்திய மேலும் ஒரு சாரதிக்கு 16ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## அரசுக்கு எதிராக ஜே.வி.பி. நடவடிக்கை

அம்பாந்தோட்டை துறைமுகம், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் உட்பட பொதுச் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் நல்லாட்சி அரசுக்கு எதிராக ஜே.வி.பியின் தேசிய எதிர்ப்பு நடவடிக்கை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை மத்திய ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் மக்களை விழிப்புணர்வு செய்யும் துண்டுப் பிரசுரங்கள் ஜே.வி.பியினரால் விநியோகிக்கப்பட்டன.

ஜே.வி.பி.யின் தலைவரும், எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உட்பட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், சுனில்ஹந்துநெத்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி லால் காந்த உள்ளிட்டோரும் இதில் கலந்து கொண்டனர்.





இந்த நிலையில் ஜே.வி.பி அரசின் செயற்பாடுகளை எதிர்த்து நாடளாவிய ரீதியில் மக்களை அணிதிரட்டி போராட்டங்களைச் செய்யவுள்ளது. இதற்கமைய இன்று அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் ஜே.வி.பியினரால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# சிறுபான்மை மக்களை உதறித் தள்ளி விட்டு நல்லாட்சி அரசால் ஆட்சி நடத்த முடியாது

## இப்படிக் கூறுகிறார் கிழக்கு விவசாய அமைச்சர்



வந்தாறுமூலை,ஜன.05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசமைப்பு சட்டத் திருத்தத்தை எதிர்பார்க்கவில்லை. மாறாக மாகாணங்களுக்கு கூடிய அதிகாரம் வழங்கக் கூடிய புதிய அரசமைப்புச் சட்டத்தையே எதிர்பார்க்கிறது. இந்த நாட்டிலே சிறுபான்மை மக்களை உதறித் தள்ளிவிட்டு ஆட்சி நடத்த முடியாது என்பதை கடந்த கால தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இதனை நல்லாட்சி அரசு உணர்ந்து செயற்பட வேண்டும்.

-இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

வந்தாறுமூலை கமநல சேவை நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விவசாயிகளுக்கு உள்ளீடு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் கவனமாக இருக்கிறது. இந்த விடயம் தொடர்பாக உபகுழுக்கள் அமைக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இறுதி அறிக்கை வருகின்ற 09, 10 ஆம் திகதிகளில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதற்கான விவாதங்கள் நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசினால் கொண்டுவரப்பட்ட அபிவிருத்தி தொடர்பான சட்டமூலத்தை அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஆட்சி வேண்டும் என்று மாகாண சபைகள் தேற்கடித்துள்ளன. அதன் மூலம் பிராந்தியங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என சிங்களவர்களும் கூறியுள்ளார்கள்.

இந்தியா என்ற ஒரு நாட்டுக்குள் வெவ்வேறு மொழி பேசுகின்ற மாநிலங்கள் தனித்தனியாக இருக்கின்றன. அதே போன்று இலங்கையில் மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கி நாடு பிளவுபடாத அளவுக்கு இருக்க முடியும். பிரிக்கப்படாத நாட்டிலே பிராந்தியங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற விதத்தில் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். -என்றார். (ச)

# மதத் தலங்களைச் சேதப்படுத்துபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்

## துரைரெட்ணசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலை,ஜன.05

இந்த நல்லாட்சி அரசில் மக்கள் சமாதானத்தை எதிர்பார்த்து இருக்கின்றனர். அதனைக் குழப்பும் வகையில் கடந்த திங்கட்கிழமை நிலாவெளிப் பகுதியில் இரண்டு ஆலயங்கள் விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளன. மதத் தலங்களை சேதப்படுத்துவது, கண்டிக்கத்தக்க சமூக விரோத செயலாகும். இவ்வாறான மோசமான செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மதத் தலங்கள் மீது சேதம் ஏற்படுத்தும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன. அண்மைக்காலமாக நடைபெறும் சம்பவங்கள் அனைத்தும் மக்கள் இடையே முரண்பாடுகளை தோற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், திட்டமிட்டு நடத்தப்படுகின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் உண்மை நிலையை அறிய வேண்டும். பொலிஸார் விசாரணைகளைத் துரிதப்படுத்தி சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க வேண்டும். இல்லை எனில் எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். -என்றார். (ச)

# மணல் ஏற்றி வந்த டிப்பர்களுடன் சாரதிகள் கைது

திருகோணமலை,ஜன.05

திருகோணமலை-மூதூர் பகுதியில் இருந்த சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த டிப்பர்களுடன் அதன் சாரதிகள் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

இப்பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வது பற்றி பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்தே இந்தக் கைது இடம்பெற்றது. (ச)

# விபத்தில் மூதாட்டி சாவு

ஏறாவூர் தன்னாமுனை என்ற இடத்தில் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் தன்னாமுனை களப்பு வீதியைச் சேர்ந்த வடிவேல் அன்னலெட்சுமி (வயது 72) என்பரே உயிரிழந்தவர் ஆவார்.

பிரஸ்தாப மூதாட்டி வழமையாக இரவு நேர உணவுக்காக கடையில் இடியப்பம் வாங்கச் செல்வதுண்டு. அதே போன்று சம்பவ தினம் அன்றும் இடியப்பம் வாங்கச் செல்லும் போது நெடுஞ்சாலையைக் கடந்துள்ளார். இந்நிலையிலேயே ஏறாவூரிலிருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளில் மோதுண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# வீதி அபிவிருத்திப் பணிகளால் காரைதீவில் மாணவர்கள் சிரமம்



காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரிக்கான 550 மீற்றர்பிரதானவீதி அபிவிருத்தி பணிகள் வெயில் காலம் மற்றும் தவணை விடுமுறை தினங்கள் முடிந்த பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் இப்பாதையால் சிரமத்தின் மத்தியில் பயணிக்கின்றனர்.

வீதி முழுவதும் கற்குவியல்கள் குவிக்கப்பட்டுள்ளன. வீதியின் அகலத்தை மையமாக வைத்து இதற்கு ஒரு பக்க வடிகான் போதுமானது என்று உயர் மட்டச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்ட போதிலும், தற்போது இருபக்ககான் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதனால் வீதி குறுகி வாகனங்கள் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. பாடசாலை நாள்கள் தவிர்ந்த தினங்களில் இவ்வீதி அபிவிருத்தி செய்யப்படுவது தொடர்பில் சம்மந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# செங்கலடி சுகாதாரப் பிரிவில் புதிதாக மூன்று கிராமங்கள்

செங்கலடி,ஜன.05

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் சுகாதார சேவைகள் பராமரிப்பிலிருந்த சில கிராமங்கள், செங்கலடிச் சுகாதார வைத் திய அதிகாரி சேவைப்பிரிவின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது எனச் சுகாதார வைத் தியஅதிகாரிகள் தெரிவித் துள்ளனர்,

ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சேவைகள் இலகுபடுத்தலுக்காக, இந்த ஒழுங்கு செயப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரை காலமும் ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் சேவைப் பரப்புக்குள் இருந்த ஏறாவூர் 4 ஆம், 5 ஆம் குறிச்சிகள் மற்றும் எல்லை நகர் ஆகிய கிராமங்களே, தற்போது செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த மூன்று கிராமங்களிலும் ஆயிரத்து140 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 892 பேர் வசிக்கின்றனர். (ச)

# காணாமற்போன மீனவர்கள் தேடும் பணி திருப்தியில்லை

## கல்முனைப் பகுதி மீனவர்கள் குற்றச்சாட்டு

ஒலுவில் துறைமுகத்தில் இருந்து கடந்த 24 ஆம் திகதி, 2 இயந்திர படகுகளில் கடலுக்குச் சென்று காணாமற் போயுள்ள கல்முனையைச் சேர்ந்த ஆறு மீனவர்களையும் மீட்பதற்கு மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கையில் திருப்தி இல்லை என்று அப்பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சாய்ந்தமருது கடற்கரையில் கல்முனைப் பிரதேசப் படகுகளின் உரிமையாளர்கள், மீனவர் சங்கத் பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோர் ஒன்று கூடி நடத்திய கலந்துரையாடலின் போதே, அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமல் போயுள்ள ஆறு மீனவர்களையும் தேடுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அதற்காகக் கடற்படை, விமானப்படை என்பன செயற்படுகின்றன எனவும் அரசியவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும், உண்மையில் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப் படுகிறதா? அல்லது கண்துடைப்புக்காக ஏதும் செய்யப்படுகிறதா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களிலும் இவ்வாறு இப்பகுதி மீனவர்கள் காணாமல் போன சந்தர்ப்பங்களில் கடற்படையினராலோ விமானப்படையினராலோ எவரும் மீட்கப்பட்ட வரலாறு கிடையாது. அப்போதெல்லாம் மீனவர்கள் தமது படகுகளில் சென்று தேடியே சிலர் மீட்கப்பட்டிருக்கின்றனர். ஆகையினால் அவர்களைத் தேடும் பணியை நாமே முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். -என்றனர். (ச)

# இறந்த நிலையில் காட்டு யானை!



*அம்பாறை-திசவாபிய-அட்டாளைச்சேனை குடியிருப்புப் பிரதேசத்தில் காட்டு யானை ஒன்று இறந்து கிடந்தது.*

*இந்த யானை பல நாள்களாக நோய்வாய்ப்பட்டு இருந்திருக்கக்கூடும் என்று வனவிலங்கு சுகாதார பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.*

# விபத்தில் குழந்தை உட்பட நால்வர் படுகாயம்

மட்டக்களப்பு-கொழும்பு வீதியில் ஓட்டோவும் கெப்ரக வாகனமும் மோதுண்டதில் ஏற்பட்ட விபத்தில் கைக்குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டமாவடியைச் சேர்ந்த முஹம்மத் நஜீர் (வயது -36) அவரது மனைவி காமிலா நஜீர் (வயது-34) பிள்ளைகளான முஹம்மத் றகீப் (வயது -4) மற்றும் கைக்குழந்தை பாத்திமா சிம்ரா (18 மாதம்) ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர். (ச)

# தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சம்பந்தனின் கருத்து வரவேற்கத்தக்கது

## அமைச்சர் ராஜித சேனாரத்ன பாராட்டு

களுத்துறை, ஜன.05

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு சிங்கள மக்களின் விருப்பம் அவசியம் என்று எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் கூறியுள்ளார். இது வரவேற்கத்தக்க விடயமாகும் என்று சுகாதார போஷாக்கு மற்றும்சுதேசமருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசாங்கத்தை எவராலும் கவிழ்த்துவிட முடியாது. அத்துடன், சுகாதார சேவையை ஒருபோதும் தனியார்மயப்படுத்தப் போவதில்லை. இலவச சுகாதார சேவையைத் தொடர்ந்தும் நாட்டு மக்களுக்கு வழங்குவோம்.

மேலும், ராஜபக்ஷக்களுடன் தனக்கு எந்தவித கொடுக்கல் வாங்கலும் கிடையாது. மக்கள் ஆணையை நான் ஒருபோதும் தவறான முறையில் பயன்படுத்தப் போவதில்லையென ஜனாதிபதி அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது. இதன் மூலம் லட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேலும், மொனராகலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் நிலவும் வறுமை நிலைக்கு தீர்வு காணப்படவுள்ளது. முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில் அவரது பிறந்த நாளுக்கு பதாகைகளை விளம்பரப்படுத்தி துறைமுகத்தையும், விமான நிலை



யத்தையும் திறந்து வைத்தது மட்டும்தான். ஆனால் இந்த பொருளாதார நிலையங்களை எப்படி கொண்டு நடத்துவது என்று ஆராயப்படவில்லை.

இதேவேளை, அதிகாரப் பகிர்வு தற்போது உலக நாடுகளில் இடம்பெற்று வருகிறது. நாட்டிற்கு தேசிய கொள்கையொன்று இருக்க வேண்டும். சிங்கள இனவாதிகள் அதிகமாக அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே பேசுகிறார்கள்.

தமிழர்கள் மத்தியிலும் இவ்வாறானோர் இருக்கின்றனர். இந்த இனவாத அரசியல் முறை நாட்டை அழித்துவிட்டது. சிலர் இன்றும் இதையே செய்து வருகின்றனர்.

தங்களை புத்திஜீவிகள் என கூறிக்கொள்ளுவோர் நாட்டைப் பற்றி சிந்திப்பதில்லை. சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக சிலர் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர்.


இந்நிலையில், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்கு சிங்கள மக்களின் விருப்பம் அவசியம் என்று எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் கூறியிருக்கின்றார். இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

2017 இல் ஊழல், மோசடி, மனித படுகொலைகள் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் விரைவாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

சில ஜனாதிபதி சட்டத்தரணிகள் இன்னமும் கிணற்றுத் தவளைகளாக செயற்படுகின்றனர். நாட்டின் சட்ட திட்டங்கள் தெரியாமல் நகல் சட்டங்களை தயாரிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சீனத் தூதரக புதிய பாதுகாப்பு ஆலோசகர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் சந்திப்பு





கொழும்பு, ஜன.05

கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றுள்ள சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் மூத்த கேணல் சூ ஜியான்வேய் நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த,விவகாரங்கள் குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன், சீன தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய மூத்த கேணல் லி செங்லிங் நாடு திரும்பவுள்ளார்.

இந்நிலையிலேயே, கேணல் சூ ஜியான்வேய் கொழும்பில் பணியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில், கேணல் சூஜியான்வேயுடன், கேணல் லி செங்லிங்கும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எந்த நாட்டின் உத்தரவுக்கும் இலங்கை கீழ்ப்பணியாது!

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



கொழும்பு, ஜன.05

எல்லா நாடுகளுடனும் இராஜதந்திர ரீதியான நல்ல உறவுகளைப் பேணிக் கொண்டாலும், எந்த நாட்டினது உத்தரவுக்கும் இலங்கை கீழ்ப் பணியாது என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தது தொடக்கம், அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தியது.

அதேவேளை, சீனா, இந்தியாவுடனான உறவுகளை விரிவாக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டு மக்களுக்கு எது சிறந்தது என்ற அடிப்படையில் தான் அரசாங்கம் முடிவுகளை எடுக்குமேதவிர, வெளிநாட்டு அரசாங்கத்தின் உத்தரவுக்கு அடிபணிந்து முடிவுகள் எடுக்கப்படாது.

இந்த நாடு எமது மக்களால், எமது அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. இலங்கையின் இறைமையை அரசாங்கம் பாதுகாக்கும்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கையினால், எல்லா நாடுகளுடனும் சுமுகமான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கிகளால் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது!

## அமைச்சர் மகிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஜன.05

துப்பாக்கிகளைப் பயன்படுத்தி, அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அங்குனகொல பெலெஸ்ஸவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



அம்பாந்தோட்டைகாணிகள் சீனாவுக்கு விற்கப்படவுள்ளன என்று வதந்திகள் பரப்பப்படுகின்றன. தோல்வியிலுள்ள அரசியல்வாதிகள் தமது அரசியல் எழுச்சிக்காகவே இத்தகைய பொய்யான பரப்புரைகளை மேற்கொள்கின்றனர்.

சீனாவுக்கு ஓர் அங்குல நிலம் கூட விற்கப்படாது. வேலைவாய்ப்பின்றி உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக, கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காகவே சீனாவுக்கு குறிப்பிட்ட கால குத்தகை அடிப்படையில் நிலங்கள்வழங்கப்படவுள்ளன.

மேலும்,வாக்குகளால் மாத்திரம் தான் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முடியும். துப்பாக்கிகளால் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஊடக சுதந்திரம் பற்றிக் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கான காலம் நீடிப்பு

கொழும்பு, ஜன.05

ஊடகசுதந்திரம், தராதரம் என்பன பற்றி மக்களின் கருத்துக்களையும், யோசனைகளையும் பெற்றுக் கொள்ளும் காலம் அரசாங்கத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுடன் கால அவகாசம் முடிவடையும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த கால எல்லை ஜனவரி மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

உயர்தரத்திலான ஊடக கலாசாரத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஊடக சுதந்திரத்தையும், தராதரத்தையும் உறுதிப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

வீடமைப்பு அதிகார சபையின் நிதியில்

# வவுனியா ரம்பவெட்டி கிராமத்தில் 50 வீடுகள் அமைப்பதற்கு அடிக்கல்





வவுனியா, ஜன.05

வவுனியா ரம்பவெட்டி கிராமத்தில் வீட்மைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியில் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தின் ஒரு கட்டமாக வவுனியா மாவட்டத்தில் ரம்பவெட்டி கிராமத்தில் 50 வீடுகள் அமைக்கப் படவுள்ளன.

இந்த வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வே நேற்று இடம்பெற்றது.

ஒவ்வொரு வீடும் 5 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ளன. இந்த வீடுகள் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் பூரணப்படுத்தப்படவுள்ளன என்றும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீளக்குடியேறிய மற்றும் புதிதாகக் குறியேறியுள்ள மக்களின் வீட்டுத் தேவையைக் கருத்தில் கொண்டு இந்த வீட்டுத்திட்டம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான், வட மாகாண சபை உறுப்பினர் எம். தியாகராசா, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், வீட்மைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகர் தயானந்த, தேசிய வீட்மைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் திருமதி வி. குரூஸ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-100)





## பண்டாரவன்னியனின் சிலை மல்லாவியில் திறந்து வைப்பு

முல்லைத்தீவு, ஜன.05

மாவீரன் பண்டாரவன்னியனின் சிலை நேற்று முன்தினம் மல்லாவி நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவப்பிரகாசம் சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் எட்டு சிலைகளில் ஒன்றாக மல்லாவி நகரின் மத்தியில் மாவீரன் பண்டாரவன்னியனின் திருவுரு வச்சிலை அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக உலகத்தமிழர் பண்பாட்டுப் பேரவையின் தலைவர் வி .எஸ் துரைராஜா கலந்துகொண்டு திருவுருவச்சிலையைத் திறந்து வைத்தார். (ஐ-81)

## மாங்குளம் பொலிஸார் அதிரடி; ஒரு தொகுதி சாராயம் மீட்பு!



வவுனியா, ஜன.05

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி சாராயம் மாங்குளம் பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

அனுமதிப்பத்திரமின்றி வாகனம் ஒன்றில் மறைத்து எடுத்துச்செல்லப்பட்ட அரச முத்திரை பொறிக்கப்பட்ட 750 மில்லி லீற்றர் அளவுடைய 84 போத்தல்களும் 180 மில்லி லீற்றர் அளவுடைய 64 போத்தல்களும் தென்னம் சாராயம் 4 போத்தல்களும் புளூ சபாரி 2 போத்தல்களுமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

வீதிச் சோதனையில் இருந்த மாங்குளம் பொலிஸார் சந்தேகத்துடன் அந்த வாகனத்தை மறித்து சோதனையிட்டபோது சாராய வகைகள் மீட்கப்பட்டன என்றும் வாகனமும் மறித்து வைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அந்த வாகனச் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர் (ஐ-100)

## ஒட்டுசுட்டானில் விபத்து ஒருவர் படுகாயம்!

முல்லைத்தீவு, ஜன.05

ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த அரச பேருந்து ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரனைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்(ஐ-81)

# கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையால் நெருக்கடி

### வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.05

கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் பாடசாலைகளில் நெருக்கடியான நிலைமை காணப்படுகிறது என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேல் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கிளிநொச்சிவலயத்தில்இருந்து 98 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர். 14 ஆசிரியர்கள் வலயத்துக்குப் புதிதாக வருவார்கள் என்ற பெயர்ப்பட்டியல் கிடைத்த நிலையில் முழுமையாக அவர்கள் இன்னும் வந்து சேரவில்லை.

இந்த நிலையில், பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய நெருக்கடி காரணமாகப் பாடசாலைகளை இயக்குவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில் ஆசிரியர்கள் பலர் ஆசிரிய ஆலோசகர்களாகச் செல்லவுள்ளனர். ஆசிரியர்கள் சிலர் அதிபர்களாகப் பதவி ஏற்றுள்ளனர்.

வலயம் பலத்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதேவேளை 32 ஆயிரத்து 51 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தக் கல்வி வலயத்தில் 112 பாடசாலைகளில் 104 பாடசாலைகள் இயங்குகின்றன. கிராமப்பாடசாலைகளிலே கூடுதலாக ஆசிரியர்கள் நெருக்கடி காணப்படுகின்றது. அக்கராயன், ஜெயபுரம், பூநகரி, கண்டாவளை பிரதேசப் பாடசாலைகளில் கூடுதலாக ஆசிரியர்கள் நெருக்கடி காணப்படுகின்றது.- என்றார். (ஐ-70)

# அரிசி ஆலை உரிமையாளர்களுக்கே களஞ்சிய நெல்லை வழங்குங்கள்!

### வடக்கு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் வவுனியா அரச அதிபரிடம் கோரிக்கை

வவுனியா, ஜன.05

வவுனியா மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்களுக்கே வவுனியா நெற்களஞ்சியசாலையில் உள்ள நெல்லை வழங்க வேண்டும் என வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் வவுனியா அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியாவில் உள்ள நெற்களஞ்சியசாலையில் உள்ள நெல்லை எடுத்துச் செல்ல தென் பகுதியில் இருந்து பாரஊர்திகள் வவுனியாவுக்கு வருகைதந்திருந்த நிலையில் வவுனியாமாவட்டஅரிசிஆலை உரிமையாளர்கள்மற்றும்பொது மக்கள் இணைந்து எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசன் ஆகியோருக்கு மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பியிருந்த நிலையில் வவுனியாமாவட்டத்தில்தெரிவு செய்யப்பட்ட 8 அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மாத்திரம் நெல்லை வழங்க அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த நிலையில் வவுனியா மாவட்டத்தில் அரிசி ஆலைகளில் பணியாற்றுபவர்களின் தொழில் வாய்ப்பு உட்பட பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி வவுனியாவில் உள்ள அரிசி ஆலைகளுக்கு நெல்லை வழங்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் கடிதம் மூலம் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-100)

# ஈழத் தமிழர்களின் நீண்ட காலக் கனவை நிஜமாக்கும் திரைக்காவியம் 'கூட்டாளி'!




தமிழீழம் மலர்ந்திருந்தால் ஈழத் தமிழர்களின் வாழ்க்கை எப்படி அமைந்திருக்கும் என்ற கருவை முன்வைத்து உருவான ஒரு சிறந்த திரைப்படம் ''கூட்டாளி''.

ஈழத்தில் இறுதிப் போரில் நடந்த கொடுமைகளையும் இது எடுத்துச் சொல்கிறது. இந்தத் திரைப்படம் ஜேர்மனியில் முதன்முதலாக தலைநகர் பேர்லினில் ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பால் திரையிடப்படுகின்றது.

ஏனைய நகரங்களிலும் விரைவில் திரையிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஐரோப்பாவில் இலங்கை அழகு ராணி

2016 ஆண்டு ஐரோப்பிய - இலங்கை அழகு ராணியாக சபிதா தோமஸ் தெரிவாகியுள்ளார்.

இந்த முறை ஐரோப்பாவின் இலங்கை அழகு ராணியாகத் தெரிவாகியுள்ளசபிதாதோமஸ் நீர்கொழும்பில் இருந்து ஐரோப்பா சென்ற பெண்ணாவார்.

தற்போது டென்மார்க்கில் வசிக்கும் அவர் நீர் கொழும்பு கெபுன்கொட பிரதேசத்தில் உள்ள மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

ஐரோப்பா முழுவதும் இலங்கைக் கொடியை நடும் எதிர்பார்ப்பில் சபிதா தோமஸ் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## சுவிஸில் புத்தாண்டும் புதுநிமிர்வும்

ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு ஆண்டுதோறும் சுவிஸ் தமிழீழ உறவுகளுடன் இன உணர்வோடும், ஜனரஞ்சகமாகவும் நடத்தப்பட்டு வரும் 'புத்தாண்டும் புதுநிமிர்வும்' மாபெரும் நிகழ்வு புத்தாண்டு தினத்தன்று சூரிச் மாநிலத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மண்டபம் நிறைந்த தமிழீழ உறவுகளுடனும், சுவிஸ் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் பேராதரவில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பில் 18 ஆவது தடவையாக சுவிஸ் தமிழர் நடத்திய இந்த மாபெரும் புத்தாண்டு நிகழ்வு நிகழ்வுச்சுடர், பொதுச்சுடர், ஈகை சுடரேற்றலுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டு ஆரம்பமானது.

தாயக இசையமைப்பாளர் இசைப் பிரியனின் நெறியாள்கையில் சுவிஸ் ரிதம் இசைக் குழுவின் இளம் இசைக் கலைஞர்களுடன் கனடாவிலிருந்து வருகை தந்த சூப்பர் சிங்கர் புகழ் ஜெசிக்கா, ஜேர்மனியிலிருந்து நிருஜன் மற்றும் எழுச்சிக் குயில் 2016 புகழ் அஜித்தாவுடன் சுவிஸ் வாழ் முன்னணி கலைஞர்கள் இணைந்து தாயக எழுச்சிப் பாடல்களை நிகழ்வின் ஆரம்பத்தில் பாடியமையானது மிகவும் உணர்வெழுச்சியாக அமைந்தது. சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் புத்தாண்டுச் செய்தியில் உறுதியெடுத்தலுடன் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் அவலம் நிறைந்த வாழ்வோடு தொடர்ந்தும் அல்லலுறும் எமது உறவுகளின் மீள் வாழ்வாதாரத்தை நோக்கமாகக் கொண்ட 'அன்பே சிவம்' செயற்திட்ட அமைப்பின் காணொலித் தொகுப்பு அகன்ற வெண்திரையில் காண்பிக்கப்பட்டு நிதிஉதவி கோரப்பட்டது. சுவிஸ் தமிழர்கள் தமது கடமையறிந்து நிதி அன்பளிப்புக்களை வழங்கியமை அவர்கள் தமிழீழ வாழ் உறவுகள் மீது வைத்துள்ள பற்றுறுதியையும், பாசத்தையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது.

இந்த நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பித்த கலைஞர்கள், வர்த்தகப் பெருந்தகைகள், ஊடக அனுசரணையாளர்கள் அனைவருக்கும் கௌரவப் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ)






## பிரான்ஸில் தைப்பொங்கல் விழா

புலம்பெயர் தமிழர் திருநாள் 2017 இந்த முறை பாரிஸ் பெருநகர மையத்தில் அமைந்துள்ள 20 ஆவது நகரசபை வளாகத்தில் நடைபெற உள்ளது.

வேற்றுமையில் ஒருத்துவம் கொள்ளும் தனித்துவ நாளாகத் தமிழர் திருநாளாகத் தமிழரின் அடையாள நாளாக புலம்பெயர் தமிழர் திருநாளாகப் பிரான்ஸில் மக்களரங்காகப் பதினொராவது தடவையாகத் தொடரப்படுகிறது.

இந்த முறை பாரிஸ் நகரின் மையத்தில் அமைந்த பாரிஸ் - 20 நகரசபை முன்றிலில் நடைபெறவுள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

தமிழர்களது புலம்பெயர்வு வாழ்வின் நீட்சியில் தமிழர் பண்பாட்டு நிகழ்வு இங்கு நடப்பது பாரிஸ் நகரின் பன்மைத்துவ அடையாள அங்கீகாரமாகவே கொள்ளல் பொருத்தமாகும்.

புலம்பெயர் தமிழர் திருநாள் - 2017 இந்த முறை, எதிர்வரும் 13ஆம் திகதி ஆய்வரங்காகவும், 14 ஆம் திகதி நிகழ்வரங்காகவும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் மௌனகுரு, ஓவியர் மருது ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், கவிதா லட்சுமி, சுஜித் ஜி, சந்தோஸ் ஆகியோர் சிறப்புப் பங்கேற்பாளர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பல்வேறு கலைக் குழுக்களின் நிகழ்வுகள், பொங்கலிடல், கோலமிடல், கண்காட்சி, அகரம் எழுதுதல் உள்ளிட்ட நிகழ்வுகளையும் கொண்டதாக இந்தமுறை புலம்பெயர் தமிழர் திருநாள் அமையவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக்குழுவின் சார்பில், சிலம்பு சங்கத்தின் ஏற்பாட்டாளர் க.முகுந்தன் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)



## தமிழாலய மாணவர்களின் நத்தார் விழா




ஜேர்மன் தமிழ்க் கல்விக் கழகத்தின் பேர்லின் தமிழாலய மாணவர்கள் நத்தார் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

"எழு ஒளிவீசு! இறை இரக்கத்தின் மனிதனாக உதயமாகு'' எனும் மையப் பொருளுக்கு அமைய மாணவர்களால் அரங்க நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

பாலன் பிறப்புக் காட்சியை அரங்கேற்றிய குழந்தைகளின் ஆர்வமும் ஆற்றலும் பெற்றோர்களின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 100 இற்கும் மேலான மாணவர்கள் பங்குபற்றினர். அவர்களுக்கு ஆசிரியர்களால் நத்தார் அன்பளிப்புகள் வழங்கப்பட்டு, கிரிஸ்மஸ் தாத்தா குழந்தைகளுக்கான இனிப்புகளையும் பரிமாறிக்கொண்டார். (ஐ)






# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 52

பொன்.வேணு கிருஷ்ணா

**4. பதே அல் ஷாம் (Fateh al-Sham)**

மிக முக்கியமாக, அல்குவைதாவுடன் தொடர்புடைய இயக்கம் இது தான். அல் நுஸ்ரா என்றால் எல்லோருக்கும் தெரியும். அண்மைக் காலத்தில் தான் பதே அல் ஷாம் என்று பெயர் மாற்றியது. தீவிரவாதம் இல்லாத, மிதவாத இயக்கமாகக் காட்டுவது அதன் நோக்கம். இதன் மூலம் சர்வதேச ஆயுத, நிதி உதவி கிடைக்கும் என்று கணக்குப் போட்டது. நீண்ட காலமாக, அல்நுஸ்ராவுக்கும், ஐ.எஸ். இற்கும் அடிக்கடி சகோதர யுத்தம் இடம் பெற்று வந்தது. இத்தனைக்கும் இரண்டுக்கும் இடையில் எந்தவொரு கொள்கை முரண்பாடுகளும் கிடையா. அல்நுஸ்ராவும் இஸ்லாமிய நாடுகளில் எல்லாம்



ஜிகாத் போராட்டம் நடத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட இயக்கம் தான். அதனால் சர்வதேச தொண்டர்களின் உதவியும் அதற்குக் கிடைத்திருந்தது. பல உலக நாடுகளில் இருந்தும் ஏராளமான இஸ்லாமிய இளைஞர்கள், சிரியாவுக்கு போராடச் சென்றனர். அவர்களில் ஒரு பகுதியினர் அல் நுஸ்ராவிலும், இன்னொரு பகுதியினர் ஐ.எஸ். இலும் சேர்ந்தனர். எதிர்பாராத விதமாக அவ்விரண்டு இயக்கங்களின் சகோதர யுத்தத்துக்குள்ளும் அகப்பட்டுக்கொண்டனர்.











அலெப்போ கைப்பற்றப் பட்ட பின்னர், சிரிய அரச படையினரின் அடுத்த கட்ட படை நடவடிக்கை எதுவாக இருக்கும் என்பதே கேள்விக்குறி. தற்போது அதற்கு முன்னால் இரண்டு தெரிவுகள் உள்ளன. வடமேற்கில், அலெப்போவில் இருந்து வெளியேறிய கிளர்ச்சிக் குழுக்கள் இன்னமும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இடிலிப் பிரதேசம். மற்றையது, வட கிழக்கில் ஐ.எஸ். கட்டுப்பாட்டில் உள்ள ராக்கா பிரதேசம்.

ஐ.எஸ். கட்டுப்பாட்டுப் பகுதி நாலாபுறமும் சுற்றி வளைக்கப் பட்டுள்ளது. அந்நிய நாடுகளுடனான தொடர்புகள் துண்டிக்கப் பட்டு விட்டன. அதனால், அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என நினைத்திருக்கலாம். ஆனால், துருக்கி எல்லையோரம் உள்ள இடிலிப் என்ற நாட்டுப்புறப் பகுதி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கே சனத்தொகை குறைவு. ஆனால், துருக்கி ஊடாகக் கிடைக்கும் உதவிகளை தடுத்து நிறுத்துவதற்கு அந்தப் பகுதியையும் கைப்பற்றுவது அவசியம்.

போருக்குள் அகப்பட்ட பொது மக்களின் நிலை என்ன? நிச்சயமாக பொது மக்களில் கணிசமான அளவு பிரிவினர் கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆதரவாக இருந்தனர். குறிப்பாக போராளிகளின் குடும்பத்தினர் இறுதி வரையில் இயக்கங்களோடு இருந்தனர். அலெப்போ நகரின் பகுதிகளை அரச படைகள் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக் கொண்டிருந்த நேரம், இயக்கப் போராளிகள் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள். மக்களும் அவர்களோடு இழுபட்டுச் சென்றனர்.

தற்போது அனைவரும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்து விட்டனர். பத்தாயிரத்துக்கும் அதிகமான போராளிகள் சரணடைந்துள்ளனர்.

அலெப்போ கைப்பற்றப்பட்ட பின்னர் நடந்ததாகச் சொல்லப்படும் படுகொலைகள், பாலியல் பலாத்காரம் பற்றிய தகவல்கள் உண்மையா? போரில் இது போன்ற சம்பவங்கள் நடப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் அந்தத் தகவல்கள் யாவும் கிளர்ச்சி இயக்கங்களின் ஆதரவாளர்களிடம் இருந்தே வருகின்றன. அவை எந்தளவு நம்பகத்தன்மை வாய்ந்தவை என்பது கேள்விக்குறி தான். அவை சுதந்திரமான ஊடகவியலாளரால் உறுதிப் படுத்தப் படவில்லை. (இது மேற்குலக அணுகு முறை)

உண்மையில் போர் நடந்த இடத்தில் எந்தவொரு மேற்கத்திய ஊடகவியலாளரும் இருக்கவில்லை. இருப்பினும், பிரித்தானியாவிலும், துருக்கியிலும் உள்ள சிரிய கிளர்ச்சியாளர்களின் ஊடக மையங்கள் மட்டுமே தகவல்களை வெளியிட்டு வருகின்றன. அவை வெளியிடும், ஒரு பக்கச் சார்பான தகவல்களுக்கு மேற்குலக ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. மறுபக்கத்தில், சிரிய அரச ஊடகங்களும், ரஷ்ய ஊடகங்களும் கூட ஒரு பக்கச் சார்பான தகவல்களை மட்டுமே வெளியிடுகின்றன. அவற்றில் உண்மை எது, பொய் எதுவென்பது யாருக்கும் தெரியாது.

கிளர்ச்சிக் குழுக்கள் மட்டுமல்லாது, மேற்குலகமும் எதிர்பார்த்திராத அலெப்போவின் வீழ்ச்சி ஒரு பெரிய அதிர்ச்சி. இறுதி நேரத்தில் முற்றுகையை விலக்கிக் கொள்ளுமாறு ரஷ்யா ஊடாக அழுத்தம் கொடுத்தும் வீழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை. ஆகையால், இனி வருங்காலத்தில் ஆசாத் அரசு மீது போர்க்குற்ற விசாரணை கொண்டு வருவதற்காகத் தற்போதே படுகொலைகள் பற்றிய தகவல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

உண்மையில் சில சரணடைந்த போராளிகளும், இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கிய மக்களில் சிலரும், அரச படைகளால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப் படலாம். அதற்கான வாய்ப்புகள் உள்ளன. போர்க்குற்றங்கள் நடந்திருக்கலாம். இல்லையென்று மறுக்க முடியாது. ஆனால், இவ்வளவு காலமும், மேற்குலகம் பயங்கரவாதிகளாகச் சித்திரித்த, மத அடிப்படைவாத வன்முறைக் கும்பல்களின் ஆட்சி நடந்த நேரம், அங்கு நடந்த குற்றங்கள் பற்றி யாரும் கவலைப்படவில்லை. மேற்குலகின் முக்கியமான பிரச்சினை ''இஸ்லாமியப் பயங்கரவாதம்'' அல்ல!


சிரிய அரச படைகளால் அலெப்போ முற்றுகைப் போர் ஆரம்பமான போதே, கிளர்ச்சிக் குழுக்களைக் காப்பாற்றுவதற்கு மேற்குலக நாடுகள் முயற்சித்தன. ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுத்து பேச்சுகள், யுத்த நிறுத்தம் என்று காலம் கடத்தி வந்தன. ஆனால், அந்தத் தந்திரம் பலிக்கவில்லை.

தோல்வியின் விளிம்பில் நிற்கும், கிளர்ச்சிக் குழுக்களில் உள்ள போராளிகள் அலெப்போ வீழ்ச்சியின் பின்னர் மனமுடைந்து காணப்படுகின்றனர். உண்மையில், இறுதியாக நடந்த போரில் அவர்களை வெளியேற்றுவதற்காகப் போர் நிறுத்தம் கொண்டுவரப்பட்டது. அரச படைகளும் அதற்கு உடன்பட்டன. அல்குவைதாவுடன் தொடர்புடைய எண்ணாயிரம் போராளிகளும் மேற்குலக உதவியுடன் வெளியேற்றப்பட்ட அரச படைகள் தெரிவிக்கின்றனர் என அவர்களைத் தான், மேற்குலக ஊடகங்கள் ''பதே போராளிகள்'' என்று குறிப்பிடுகின்றன. அது அல்நுஸ்ரா இயக்கம் என்பதை மறைக்கின்றன.

மேற்குலக நாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் தலையீடு காரணமாக, கிழக்கு அலெப்போவில் இருந்து வெளியேறும் பொது மக்களையும், போராளிகளையும் கொண்டு செல்வதற்கு பேருந்து வண்டிகள் அனுப்பப் பட்டன. அவர்களை இடிலிப் பிரதேசத்தில் கொண்டு சென்று விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டன. கிளர்ச்சிக் குழுக்கள் பொது மக்களைத் தம்மோடு பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்கின்றனர் எனக் குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. ஆனால், அதை உறுதிப் படுத்த முடியவில்லை. போராளிக் குடும்பங்கள், இயக்க ஆதரவாளர்கள் ஆகிய பொதுமக்களும் அவர்களுடன் செல்லக் கூடும். அவர்களைத் தவிர ஏனைய மக்கள் பலவந்தமாகக் கொண்டு செல்லப்படுவதையும் தவிர்க்க முடியாது.


இறுதிப் போர் இடிலிப் பகுதியில் நடைபெறவுள்ளது என்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்து விட்டது. அதாவது, அலெப்போவில் இருந்து வெளியேறிய இயக்கங்கள் அங்கு தமது பாதுகாப்பு அரண்களை அமைத்துக் கொள்வார்கள். அவர்களுடன் போரிரால் இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களும் தங்கியிருப்பார்கள். அதனால், இடிலிப் பிரதேசத்தைக் கைப்பற்றும் போரில் பேரழிவு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. பெருமளவு பொது மக்களும் கொல்லப்படலாம். அதை இப்போதே மேற்கத்திய நாடுகளின் தலைவர்கள் எதிர்வு கூறி விட்டனர்.

(கேள்வி தொடரும்...)



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர் களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின் றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.





# தமிழ்த் தேசிய எழுச்சி

17

## வன்முறைப் புயல் வீசிய 'கறுப்பு ஜூலை'

துல்லியமான, இசையும் பிசகாத புலிகளின் போரியல் தேர்ச்சியை இத் தாக்குதல் பறைசாற்றியது. பதின்மூன்று சிங்களப் படையினர் அதே இடத்தில் கொல்லப்பட்டார்கள். இரண்டு பேருக்குப் படுகாயம். அந்த நாள்களில், சிங்கள இராணுவத்துக்கு இது ஒரு பெரும் உயிரிழப்பாக அமைந்தது. விடுதலைப்புலிகளின் தரப்பில் லெப்டினன்ட் செல்லக்கிளி இத்தாக்கு தலில் வீரச்சாவைத் தழுவிக் கொண் டார்.

செல்லக்கிளி அம்மான் (செல் வநாயகம்) அஞ்சா நெஞ்சம் படைத்த ஒரு வீரன். தலைசிறந்த தாக்குதற் தளபதி. தலைவர் பிரபாகரனின் இளம் பராயத் தோழன். ஆரம்ப காலப் போராட்ட வரலாற்றில் பல சாதனை களைப் படைத்தவன். அந்நாளில் சிங்கள தேசத்தையே கிலிகொள்ளச் செய்த ஒரு வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கி, அத் தாக்குதலிலேயே களப் பலியாகிய அந்த வீரனின் மறைவு எமது இயக்கத் துக்கு ஒரு பேரிழப்பாகியது.

தமிழரின் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என்று உறுதியாக நம்பியிருந்த ஆட்சியா ளருக்குத் தமிழ்ப் புலிகளின் கெரில்லா படையினரால் பதின்மூன்று சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டமை, ஒரு பலத்த அடியாகப் பட்டது. ஜனாதி பதி ஜெயவர்த்தனா ஒரு கொடுங் கோலர். இரும்புப் பிடியோடு நாட்டை ஆண்டு கொண்டிருந்தார். அவருடைய மூத்த அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, சிறில் மத்தியூ, காமினி திஸ நாயக்கா ஆகியோர் பெயர் பெற்ற இன வாதிகளாவர். தமிழர் போராட்டத்தை இராணுவ அடக்குமுறையால் நசுக்க வேண்டும் என்ற கொடிய கொள்கை யைப் பல மாகப் பற்றிக் கொண்டிருந் தார்கள். இத்தகைய தலைமையைக் கொண் டிருந்த ஆட்சிப் பீடத்துக்கு, தமிழ ருடைய ஆயுதக் கிளர்ச்சி வளர்ந்து சிங்களப் படையினரின் உயிர்களைப் பறிப்பது தாங்கமுடியாத அவமானமாகப் பட்டது. இராணு வத்திடம் இருந்து கடுமையான பழி வாங்கல் நடவடிக்கை மின்னல் வேகத் தில் வரலாம் என்ற பதற்ற அங்கலாய்ப் போடு யாழ்ப்பாண மக்கள் எதிர்பார்த்து நின்றார்கள். எதிர்பார்த்தபடியே, மறுநாள், திருநெல்வேலியிலும் கந்தர்மடத்திலும் சீற்றச் சன்னதம் ஆடிய அரச படையினரால் 60 தமிழ்ப் பொதுமக்கள் ஈவிரக்கம் இன்றிப் படு



செல்லக்கிளி அம்மான் (செல்வநாயகம்) அஞ்சா நெஞ்சம் படைத்த ஒரு வீரன். தலைசிறந்த தாக்குதற் தளபதி. தலைவர் பிரபாகரனின் இளம்பராயத் தோழன். ஆரம்ப காலப் போராட்ட வரலாற்றில் பல சாதனை களைப் படைத்தவன். அந்நாளில் சிங்கள தேசத்தையே கிலிகொள்ளச் செய்த ஒரு வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கி, அத் தாக்குதலிலேயே களப் பலியாகிய அந்த வீரனின் மறைவு எமது இயக்கத்துக்கு ஒரு பேரிழப்பாகியது.

கொலை செய்யப்பட்டார் கள். ஆனால், தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற இனக் கலவரத் தாக்குதல் களோடு ஒப்பிடும்போது, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ வெறியாட்டம் சிறு அளவிலானது என்றே கூறலாம். தலைநகரில் தொடங் கிய இனக்கலவரத் தாக்குதல்கள் நாடு முழுவதும் பரவி, இதுகாறும் நடை பெறாத அளவுக்குத் தமிழ் உயிர் களையும் உடைமைகளையும் அழித்து ஒழித்தன.

கடந்த காலங்களிற்கூட, இனக் கலவர வன்முறைத் தாக்குதல்களுக்குத் தமிழ் மக்கள் அவ்வப்போது முகம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 83 ஜூலை யில் இடம்பெற்ற இன அழிவு முன்பு நிகழ்ந்த எத னு டனும் ஒப்பிட முடியாத அளவுக்குக் கொடுமை யானதாக – குரூரமானதாக– மிகப் பெரியதாக– அமைந் தது. விடுதலைப் புலி களால் சிங்களப் படையினர் கொல்லப்பட்டமையை ஒட்டி, திடீரென எழுந்த பழி வாங்கும் உணர்ச்சியாக இந்த இனக்கலவரம் காணப் படவில்லை. மாறாக, இனக் கொலை என்று வர்ணிக்கும் அளவுக்கு, அரசால் ஏற்க னவே திட்டம் வகுக்கப் பட்டு, தருணம் பார்த்து நடத்தப்பட்ட கொடுந்தாக்கு தலாக 83 ஜூலை வெறியாட்டம் காணப் பட்டது.

திருநெல்வேலித் தாக்குதலுக்குப் பின்பு உருவான பதற்ற நிலையை அரசு முடிச்சுப் போட்டுக் கையாண்ட விதம், அதன் விஷமப் போக்கை கோடிட்டுக்காட்டியது. இனவெறியைத் தூண்டும் செய்தி அறிக்கைகள் மறு நாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக தடித்த எழுத்தில் வெளி வந்தன. இவை சிங்கள மக்களிடையே கொதிப் புணர்வைக் கிளறிவிட்டன. 'வீழ்ந்த வீரர்கள்' பதின் மூன்று பேரும், கொழும்பு பிரதான மயானமான கனத் தையில் பூரண இராணுவ மரியாதை யுடன் அடக்கம் செய்யப்படுவர் என்று அரசு அறிவித்தது. எண்ணுக் கணக்கற்ற சிங்களவர், தலைநகருக்குத் திரண்டு வர இது வழிவகுத்தது. ஆனாலும், அறிவித்தபடி மரணச் சடங்குகள் நடக்கவில்லை. இறந்த இராணுவத்தினரின் உடலங்கள் மயானத்துக்கு வந்து சேர்வது தாமதம் ஆயிற்று. இதன் பின், சம்பந்தப்பட்ட படையினரின் உடலங்கள் உறவினர் களிடம் ஒப்படைக்கப்போவதாக அரசு அறிவித்தது. அடக்கத்துக்கு வந்து சேர்ந்த மக்களிடையே இது மனக் குழப்பத்தையும் பொறுமை யின்மையையும் தோற்றுவித்தது. நேரம் செல்லச் செல்ல, பொறுமை எல்லை மீறத் தொடங்கியது. மாலையில் இருளத் தொடங்கியதும் சனக்கும்பல் கொதித்தெழுந்து வன் செயலில் இறங்கியது. கலவரம் இரத்தப் பிரளயமாக வளர்ந்தது. தமிழர்களைப் படுகொலை செய் வதும், சொத்துக்களை நிர்மூலமாக் குவதுமாகக் கொடும் செயல்கள் தொடர்ந்தன. இனவெறியாட்டம் தட்டிக் கேட்பாரின்றி நாள் கணக்கில் இழுபட்டது. தலைநகரில் தொடங்கிய இந்தக் குரூர வெறியாட்டம் அதே வடிவங்களில் தென்னிலங்கை மாவட்ட நகரங்களுக்கும் அலையாகப் பரவியது. தமிழர் மரணமும் தமிழர் சொத்துடைமை அழிப்பும் எங்கும் தலைவிரித்தாடின. பாதுகாப்பு எதுவு மற்ற நிலையில் மூவாயிரம் தமிழ் மக்கள் காட்டு மிராண்டித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள் பெரும்பாலன தமிழர்கள் சிங்களக் காடையர் கும்பல்களால் கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப் பட்டார்கள். அல்லது அடித்துக் கொல்லப்பட்டார்கள். பல தமிழ்க் குடும் பங்கள் உயிரோடு எரிக்கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமாயிருந்த ஆயிரக் கணக்கான வீடுகள், கடைகள், கட்ட டங்கள், கைத்தொழில் வளாகங்கள், சினிமாக்கள், எரிபொருள்நிலையங்கள் – எரித்து தரைமட்டம் ஆக்கப்பட்டன. கொழும்பு நகரில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தமிழர்கள் இரவோடிரவாக வீடு வாசல் இழந்து அகதிகள் ஆனார்கள்.

கலகக்காரர்கள், கண்மூடித்தன மாக வோ தறிகெட்டோ தாக்கவில்லை. அவர்களது தாக்குதல்கள் நன்கு திட்ட மிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டவை யாக அமையப் பெற்றிருந்தன எனப் பார்வையாளர்கள் தெரிவித்தனர். கலவரக் கும்பல்களுக்குத் தமிழரின் வதிவிடங்கள், சொத்துக்கள், உடைமைகள் தொடர்பான அச்சொட் டான விவரங்கள் வழங்கப்பட்டிருந் தன. இந்த இனக்கலவரத்தில் அரச அதிகாரிகளின் கறைபட்ட கை கலந் திருந்தது என்பது தெட்டத் தெளிவா கியது. தலைநகரில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான தமிழரின் தொழிற்சாலைகளும் வர்த்தக நிலையங்களும் சாம்பல் மேடாக்கப் பட்டிருந்தன.

(தொடரும்...)



கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று முன்தினம் தனது பிறந்தநாளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளார். இதன்போது கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலரும் பங்கேற்றிருந்தனர். வாசுதேவ நாணயக்கார நேற்றுமுன்தினம் தனது 78 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி விலையில் கட்டுப்பாடு

கொழும்பு, ஜன.05

சந்தையில் அரிசியின் விலை உயர்வைத் தடுக்கும் வகையில் இறக்குமதி செய்யப்படும் அரிசியின் விலைகளில் கட்டுப்பாட்டை விதிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதியும் அமைச்சரவையினரும் இந்த விலைக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பர் என்று கிராமிய பொருளாதார அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சதோசவால் அரிசி விநியோகம் செய்யப்படும்போது ஆலை உரிமையாளர்களால் விலைநிர்ணயம் செய்யப்படுவது முடியாமல் போகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

138 அரிசி ஆலை உரிமையாளர்கள், தமது களஞ்சியப்படுத்தல் அரிசியைச் சதோசவுக்கு வழங்கியிருக்கவேண்டும்.

எனினும் 28 உரிமையாளர்களே அவ்வாறு செய்தனர்.

ஏனையவர்கள் தமது கையிருப்பு அரிசியைத் தனியாருக்கு விற்பனை செய்துள்ளனர். இதில் முன்னைய அரசைப் போன்று ஜனாதிபதியின் குடும்பத்தினரின் கீழ் உள்ள அரிசி ஆலைகள் செயற்படவில்லை.

அவர்கள், தமது கையிருப்பைச் சதோசவுக்கு வழங்கியுள்ளார்கள் என்றும் ஹரிசன் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# புத்தாண்டில் ஒரே சூலில் பிரசவித்த மூன்று குழந்தைகளும் உயிரிழப்பு!

வவுனியா, ஜன.05

வவுனியா பொதுவைத்தியசாலையில் புத்தாண்டு தினமான கடந்த முதலாம் திகதியன்று ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று குழந்தைகளும் உயிரிழந்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை மாலை இரு பிள்ளைகள் உயிரிழந்துள்ளன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மற்றைய குழந்தையும் இறந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

புத்தாண்டு தினத்தில் தாய் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்தன. இந்தக் குழந்தைகளின் நிறை குறைவாகக் காணப்பட்டமையால் சிறுவர் (குழந்தை) சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று குழந்தைகளும் உயிரிழந்துள்ளன.

குழந்தைகளின் நிறை 600 கிராம் மற்றும் 550 கிராமாகக் காணப்பட்டது என்று தெரிவித்தார். (ஐ)

# ஓகஸ்ட் வரைக்கும் அரிசித் தட்டுப்பாடு வராது

## விவசாயிகள் சம்மேளனம் தகவல்

கொழும்பு, ஜன.05

இந்த ஆண்டில் ஓகஸ்ட் மாதம் வரையில் அரசிக்குத் தட்டுப்பாடு எதுவும் இருக்க மாட்டாது. வருட ஆரம்பத்தில் பத்து லீட்சம் தொன் அரிசி புழக்கத்துக்கு விடப்படும்.

அரிசி இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் நாமல் கருணரத்னா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அரிசிக்குத் தட்டுப்பாடு வரும் என்ற பீதியை உண்டாக்கும் பொருட்டு அரிசி இறக்குமதியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார். இந்தப் போகத்தில் 32 மில்லியன் தொன் அறுவடை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால் ஓகஸ்ட் மாதம் வரை அரிசித் தட்டுப்பாடு வருவதற்கான சாத்தியம் எதுவும் இல்லை என்றும் நாமல் கருணாரத்னா தெரிவித்தார்.

## தினசரி ராசி பலன் 05.01.2017

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 10.30 - 11.30 |
| ராகு காலம் | : 1.30 - 3.00 |
| குளிகன் | : 9.00 - 10.30 |
| எமகண்டம் | : 6.00 - 7.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

கீழ் நோக்கு நாள்

**மேஷம்:** அமைதி - மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி அமைதி காணும் நன்னாள்.

**ரிஷபம்:** நற்சொல் - எண்ணங்களும், செயல்களும் நற்சொற்களாகி வெற்றியையே தரும் நன்னாள்.

**மிதுனம்:** சினம் - வீண்கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும் நாள்.

**கடகம்:** கவனம் - எடுக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும், ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**சிம்மம்:** பாராட்டு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் பொறுமையுடன் செயல்பட்டால் உழைப்புக்கு தகுந்த பாராட்டுக்கள் வரும் நன்னாள்.
சந்திராஷ்டமம் : பூரம் , உத்திரம் முதலாம் பாதம்.

**கன்னி:** பாசம் - அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும் நன்னாள்.

**துலாம்:** நலம் - இன்று மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காணும் நன்னாள்.

**விருச்சிகம்:** நிம்மதி - வளமையான வாழ்வும் அமைதியும் வாசல் கதவை தட்டும். நிம்மதி தரும் நன்னாள்.

**தனுசு:** வரவு - இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும் நன்னாள்.

**மகரம்:** லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும் நன்னாள்.

**கும்பம்:** பக்தி - தெய்வ வழிபாடுகள் செய்ய முயற்சிகள் முன்னேற்றம் காணும் நன்னாள்.

**மீனம்:** மறதி - இன்று நீங்கள் செய்யும் செயல்களில் ஞாபகம் சற்று குறைவாக இருக்கும் நாள்.

# 2017 ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்

'எண்கள் எதையும் செய்யும்'
2017ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்
அன்பான வாசகர்களே, பிறந்த திகதி தெரியாதவர்கள் தங்களது ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

## பொதுப்பலன்

இந்த ஆண்டு தன்பலம் தனக்கே தெரியும் என்பதுபோல ஒவ்வொருவரும் மிக உத்வேகமாக தனது பணிகளை கவனிக்க துவங்கவிருப்பதால் உற்பத்தித்துறை மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் பெறும். அரசாங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக வந்து குவியும் மக்களுக்கு. கால்நடைகள் அதிகரிக்கும். நில விற்பனை பெருகும். சாதாரண பதவியில் இருப்போர் தமது விடாமுயற்சியால் நம்பமுடியாத ஏற்றங்களை அடைவர். கண் சம்பந்தமான நோய்கள் பலருக்கு வரலாம். இதற்கான முன்னெச்சரிக்கை அவசியம். அதிகளவில் துன்புறுத்தி வந்த நோய்கள் அகன்றுவிடும். ஆசாரமாக நடந்து ஆண்டவன் பற்றுடையவர்கள் அதிக அளவில் ஆனந்தமான வாழ்வை பெறுவர். பொதுப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்ட பலர் அரசாங்க திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் அதிகமான உதவிகரமாக இருப்பதால் மக்கள் கூடுதல் பலன்களை பெற்று மகிழ்வர்.

குறிப்பாக உலகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெறும். பொருளாதார ஏற்றத்தை அள்ளிக் குவிக்கும். நாட்டின் தலைவர்கள் உலக மத்தியில் போற்றப்படும் அளவுக்கு அரசின் திட்டங்களை வகுத்து செயற்படுவர். இந்த ஆண்டின் துவக்கம் 1ஆம் எண்ணிலும், ஞாயிறு அன்று துவங்குவதாலும், 1.1.2017 இன் கூட்டு எண் 3-ஆக வருவதாலும், எல்லா இடங்களிலும் நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு மிகுந்து காணப்படுவதால் தேசத்தில் விரோதத்தை ஏற்படுத்துவோர் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். நாட்டின் பெயர் எண் 1ஆக வரும் நாடுகளும், 3ஆம் எண்ணைக் கொண்ட நாடுகளும் உலக மத்தியில் பெரும் செல்வாக்கை நிலை நாட்டும்.

மேலும் இந்தியாவின் பொருளாதார ஏற்றம் வானளவில் உயரும். இரும்பு, பெற்றோலிய உற்பத்தி, புடைவைத் தொழில், மருந்து, மருத்துவ நிலையங்கள், கல்வி, அரசாட்சி கொடி கட்டிப் பறக்கும். மொத்தத்தில் நல்லாட்சியாளர்களின் நிலை நினைத்துப் பார்த்திராத அளவுக்கு உயர்ந்திடும்.

## எண் 9


- 9, 18, 27 திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயர் எண் 9-ஐ பெற்றவர்களும் இந்த ஆண்டு பிறரிடம் கவனமாகப் பேசுவது நல்லது. வம்பு வழக்குகளில் சிக்கும் நிலை ஏற்படும்.
- தங்களின் நியாயமான கோபம் எங்கும் ஏற்றுக் கொள்ளப்படாது. பொறுமை அவசியம்.
- கட்டுக்கு மீறிய செலவுகளால் கடன் பெறும் நிலை ஏற்பட்டாலும் எதையும் சமாளிக்கும் வல்லமை உங்களுக்கு நிச்சயம் உண்டு.
- திருமண காரியங்கள் தடையின்றி நடந்தாலும், முக்கிய நேரத்தில் தங்களது பேச்சாற்றலால் பெரும் பிரச்சினைகள் ஏற்படலாம். கட்டுக்குள் இருங்கள்.
- உடல்நிலையில் உஷ்ணம் அதிகரிக்கும். வாயுப் பிரச்சினை ஏற்படலாம். உணவுக் கட்டுப்பாடு அவசியம்.
- ஆரம்பித்த பல தொழில்கள் தொடர்ந்து முன்னேற்றம் காணும். தொழிலாளர்களிடம் அன்பான அணுகுமுறை மிக அவசியம். கவனம் தொழில் அதிபர்களே.
- வாடிக்கையாளர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரியுங்கள். குறிப்பாக இரும்பு, மருந்து, உணவகங்கள் மூலம் அதிக ஆதாயம் உண்டு வியாபாரிகளுக்கு.
- பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம், கேட்ட கடன் தொகை எல்லாம் வரும். இருப்பினும் மேலதிகாரிகளுடன் மோதல் போக்கு நல்லதல்ல பணியாளர்களே.
- அரசியல்வாதிகளுக்கு விரும்பிய தலைமைப் பதவிகள் கிடைக்கும். அதே சமயம் கூடவே இருந்தவர்களின் குழிபறிப்பு வேலைகளும் நடக்கலாம். கவனம்.
- ஏதேனும் புதிய ஒப்பந்தங்கள் வரவுக்கு வழி காட்டும். பெண்களால் பிரச்சினைகள் எழலாம். கவனம் கலைஞர்களே.
- பயிர் விளைச்சல் அமோகமாக இருந்தாலும், அவ்வப்போது தண்ணீர் பற்றாக்குறை ஏற்படலாம். விவேகமாகச் செயல்படுவது விவசாயிகளுக்கு நல்லது.
- பெண்கள் நினைத்தமை போல் நல்வாழ்க்கை வாழ்ந்தாலும், பெரியோர்களை மதிக்கக் கற்றுக் கொள்வது மிக அவசியம் என்பதை உணரவும்.
- மாணவர்கள் மதிப்பெண்களை அள்ளிக்குவித்தாலும், ஆசிரியர்களிடம் நன்மதிப்பைப் பெற இயலாது. விளையாட்டின் மூலம் விரிவான புகழ் பெறுவர்.



கலாநிதி ஜே.என்.எஸ்.செல்வன் Ph.D.,
எண் கணித ஆலோசகர்
வாஸ்து நிபுணர், நிலத்தடி நீர் நிபுணர்.
Email : jnsnumerro@yahoo.co.in

# நாட்டின் வளர்ச்சி வீதத்தில் தாக்கம் செலுத்தும் வறட்சியான காலநிலை, உலகப் பொருளாதாரம்!

## மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.05

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை மற்றும் உலக பொருளாதார நிலைமையால் வளர்ச்சி வீதத்தில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படலாம் என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டுக்கான நாணய மாற்றம் நிதியியல்துறை கொள்கைகளை உள்ளடக்கிய '2017 வழிகாட்டல்' திட்டத்தை வெளியிட்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

2016 ஆம் ஆண்டில் மேல்நோக்கிய அழுத்தங்கள் காணப்பட்ட போதும் பணவீக்கம் தொடர்ந்தும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் பங்களிப்பு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் பணவீக்கத்தை நாடு ஒற்றை இலக்கத்தில் தொடர்ந்தும் பேண எதிர்பார்க்கிறது.

ஸ்திரமான பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் வகையில் கொள்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் நாணய மாற்றுக் கொள்கைச் சட்டம் உள்ளிட்ட மூன்று சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன. மத்திய வங்கியை மீளமைப்பதற்கான வேலைத்திட்டங்களும் இந்த வருடத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.


நாணயக் கொள்கை தொடர்பில் இரண்டு முக்கிய கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு ஒன்றை நோக்கிய நடவடிக்கையை வலுப்படுத்தல் மற்றும் செலாவணி வீத முகாமைத்துவத்துக்கான கட்டமைப்பும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவொன்று மீண்டும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

நாணயக் கொள்கை தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கும் போது செயன்முறைகளுக்குச் சிறந்த உந்துதலை அளிக்கும் விதத்தில் நாணயக் கொள்கை ஆலோசனைக்குழுவின் நோக்கு மற்றும் கருத்துக்களில் இருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றோம். 2017 ஆம் ஆண்டு சர்வதேச மற்றும் உள்ளூர் முதலீடுகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, திறைசேரி முறி விநியோக சர்ச்சை தொடர்பில் மத்திய வங்கியின் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் கோடிக்கணக்கான பணம் மத்திய வங்கியிலிருந்து வெளிச்சென்றமை தொடர்பிலும் முழுமையான விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.-என்றார். (ஐ)







சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற வருடாந்த திருவாசக விழாவின்போது நாயன்மார்களது உருவப்படங்களுடன் கூடிய திருவாசக ஏடுகளடங்கிய பீடம் ஆச்சிரம வளாகத்துக்குள் எடுத்துவரப்படுகிறது.

திருவாசக விழாவில் இடம்பெற்ற பட்டி மன்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை பிரதி அதிபர் ச. லலீசன் குழுவினரோடு உள்ளார். சந்நிதியான் ஆச்சிரமத்தால் அமரர் மகேஸ்வரனின் நினைவாக வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களைப் பெற்ற மாணவர்களுடன் விழாவில் பங்கு பற்றிய விருந்தினர்களும் காணப்படுகின்றனர். (ஐ)

# கோட்டை விகாரைக் குரு பதவிக்கு போட்டிக்கு நின்ற கொரியப் பிக்கு!

## சேவ்வாயன்று நாடுகடத்தப்பட்டார்

கொழும்பு, ஜன.05

கோட்டை நாகவிஹாரையின் தலைமைக் குருவுக்கான போட்டியில் ஈடுபட்டிருந்த கொரியாவின் பிக்கு நேற்று முன் தினம் நாடு கடத்தப்பட்டார்.

அந்த விஹாரையில் தங்கியிருந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் இரவு அமைச்சர் எஸ். பி. நாவின்னவின் உத்தரவின் பேரில் நாடு கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலஞ்சென்ற மாதுலுவாவே சோபித்த தேரருக்கு பின்னர் தாமே நாகவிஹாரையின் தலைமைக் குரு என்று அவர் தம்மைப் பிரகடனப் படுத்தியிருந்தார்.

இந்தநிலையில் விஹாரைக்கு சென்ற குடிவரவு அதிகாரிகள், அவரை மீரிஹன பொலிஸாரின் உதவியுடன் நாடு கடத்தினர்.

இதன்போது சுமார் நான்கு மணித்தியாலங்களாக அதிகாரிகளுக்கும் கொரியப் பிக்கு யுங் மூன் ஒவ்வுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும் குடிவரவு அதிகாரிகள் அவரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, கொரியாவுக்கு அனுப்பிவைத்தனர்.

குறித்த தென்கொரிய பிக்கு, 2000ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு சுற்றுலா விஸாவில் வந்துள்ளார். நான்காவது தடவை இவ்வாறு வந்தபோது இலங்கையிலேயே அவர் தங்கிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# இலங்கை வாழ் தமிழர்களுக்கு சுயாட்சி பெற்றுக் கொடுங்கள்

## ட்ரம்பிடம் புலம்பெயர் தமிழர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன.05

இலங்கை வாழ் தமிழர்களுக்கு சுயாட்சி அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்குமாறு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். அவசர மகஜர் ஒன்றின் ஊடாக இந்தக் கோரிக்கையை ட்ரம்பிடம் அவர்கள் முன் வைத்துள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த ஆண்டுக்குள் இலங்கைத் தமிழர்களுக்கு சுயநிர்ணய அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

இலங்கையில் இராணுவத்தால் ஒரு லட்சத்து 45 ஆயிரம் தமிழர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினரைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.- என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மின் தடை

யாழ்ப்பாணம், ஜன.05

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு நிலைகளுக்காக இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 5.30 மணிவரையும் யாழ்.பிரதேசத்தில் பாரதி வீதி, பத்தைமேனி, தம்பாலை, இடைக்காடு வளலாய், மீசாலை பங்களா வீதி, டச்சுவீதி விக்கினேஸ்வரா பாடசாலை ஆகிய இடங்களிலும்-

மன்னார் பிரதேசத்தில் முருங்கனில் இருந்து தலைமன்னார் வரை வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கிரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடி படை முகாம், வங்காலைபாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பாம் ஹவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் -

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 5.30 மணி வரை மன்னார் பிரதேசத்தில் பள்ளி முனையிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# காங்கேசன்துறையில் கைவிடப்பட்ட பழைய ரயில் பெட்டிகள் அகற்றல்



வலி. வடக்கு, ஜன.05


காங்கேசன்துறை பகுதியில் கைவிடபட்ட நிலையிலிருந்த ரயில் பெட்டிகள் நேற்று முன் தினம் அகற்றப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் இருந்து யுத்தம் காரணமாக ரயில் சேவை நிறுத்தப்பட்ட காலத்தில் காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் ஒருதொகை ரயில் பெட்டிகள் கைவிடப்பட்ட நிலையில் கிடந்தன.

இந்த நிலையில் குறித்த பகுதியில் தற்சமயம் மீள் குடியேற்ற நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் ரயில் நிலையத்துக்கு வரும் குறுக்கு வீதிகளும் இதனால் அடைக்கப்பட்டிருந்தன.

இதனைக் கருத்தில் கொண்டு ரயில்வேத் திணைக்களத்தால் அங்கிருந்து பழைய ரயில் பெட்டிகள் அகற்றப்பட்டுள்ளன. (ஐ)

## இறந்த நிலையில் ஒதுங்கியது கடற்பசு!



இராமேஸ்வரம், ஜன.05

இராமேஸ்வரம் அடுத்துள்ள புதுமடம் கடற்கரையில் நேற்று முன்தினம் இறந்த நிலையில் கடல்பசு ஒன்று கரை ஒதுங்கியது.

மேலும் இந்தக் கடல் பசு 30 வயது மதிக்கத்தக்க ஆண் என்றும் 2.8 மீற்றர் நீளமும் 1.85 மீற்றர் சுற்றளவும் 250 கிலோ எடையும் கொண்டது.

இவ்வாறு கரை ஒதுங்கிய கடற்பசுவைக் கண்ட அந்தப் பகுதி மக்கள் மண்டபம் வனத்துறையினருக்குத் தகவல் அளித்தனர்.

இதையடுத்து அங்கு சென்ற வனத்துறை அதிகாரிகள் கரை ஒதுங்கிய கடல் பசுவைக் கைப்பற்றி அது இறந்தது தொடர்பில் ஆய்வு செய்தனர்.

இது மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பாறையில் மோதி உயிரிழந்திருக்கலாம் என்று வனத்துறையினர் தெரிவித்தனர்.

மண்டபம் கால்நடைத்துறை மருத்துவர் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டுக்கடல் பசுவைப் பிரேத பரிசோதனை செய்தார். அதன் பின் அப்பசு கடற்கரை அருகே புதைக்கப்பட்டது.

இதேவேளை கடல் பசு கரை ஒதுங்கியதை அந்தப்பகுதி மக்கள் ஆவலுடன் பார்த்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கனத்த இதயத்துடன் பொறுப்பை ஏற்கிறேன்

## நேற்றைய தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் செயல் தலைவராகத் தெரிவான ஸ்டாலின் ஏற்புரை

சென்னை, ஜன.05

செயல் தலைவர் பதவியை நான் ஒரு பொறுப்பாகத்தான் ஏற்கிறேன். பதவியாக இல்லை. கனத்த இதயத்துடன் செயல் தலைவர் பொறுப்பை ஏற்கின்றேன் என்று கூறினார் தி.மு.க. செயல் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட மு. க. ஸ்டாலின்.

தனது ஏற்புரையில் ஸ்டாலின் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''தற்போது தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நிலை இருக்கும் சூழலில், எனக்கு இந்த செயல் தெரிவு பெரிதாக எந்த மகிழ்ச்சியையும் அளிக்கவில்லை.

''கட்சியில் வட்டப் பிரதிநிதி, பகுதிப் பிரதிநிதி, மாவட்டப் பிரதிநிதி என்று படிப்படியாக நான் வளர்ந்து வந்துள்ளேன். தி.மு.க. தலைவர் கருணாநிதிக்குத் துணை நிற்கும் வழியில் எனது கட்சிப் பணி அமையும்.''- என்றார்.

இதேவேளை, தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஸ்டாலினை செயல் தலைவராக நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கருணாநிதியின் மகனும் தி.மு.க. பொருளாளருமான ஸ்டாலினை செயல் தலைவராக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்த நிலையில், நேற்றைய தி.மு.க. பொதுக் குழுவில் ஸ்டாலின் செயல் தலைவராக்கப்படுகின்றமை உறுதி என்று கூறப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் தி.மு.க. பொதுக்குழு நேற்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.



தி.மு.க.செயல் தலைவராகத் தெரிவான ஸ்டாலின் தந்தை கருணாநிதியைச் சந்தித்து ஆசிபெற்ற போது...

இந்தக்கூட்டத்தில் கருணாநிதி பங்கேற்கவில்லை. தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் முதலில் ஜெயலலிதா உள்ளிட்டோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்பின்னர் தி.மு.கவின் செயல் தலைவராக ஸ்டாலினை நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்காக தி.மு.கவின் சட்டவிதி 18 இல் திருத்தம் மேற்கொள்ள நேற்றைய பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்பட்டது.

இதையடுத்து ஸ்டாலின் செயல் தலைவரானமையை தி.மு.கவினர் உற்சாகமாகக் கொண்டாடினர். (எ)

## போயஸ் கார்டன் வீட்டுக்கு மீண்டும் பொலிஸ் பாதுகாப்பு

சென்னை, ஜன.005

சசிகலா தங்கியுள்ள, சென்னை, போயஸ் கார்டன் வீட்டுக்கு, மீண்டும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, போயஸ் கார்டன், வேதா இல்லத்தில் வசித்து வந்தார். அங்கு, தற்போது தோழி சசிகலா தங்கி உள்ளார்.

பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதாகக் கருதப்பட்டதால், ஜெயலிதாவுக்கு, 'இசட் பிளஸ்' பாதுகாப்பு அளிக்கப்பட்டது. மாநில பொலிஸ் முதல்வர் பாதுகாப்புப் பிரிவு உட்பட, தினமும், 500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

கடந்த மாதம் 5 ஆம் திகதி ஜெயலலிதாவின் சாவு அறிவிப்பு வெளியானதும், மத்திய அரசு, 'இசட் பிளஸ்' பாதுகாப்பைத் திரும்ப பெற்றது. ஆனால், மாநிலப் பொலிஸார், ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னரும், போயஸ் கார்டனில் தங்கியுள்ள சசிகலாவுக்கு, அதே அளவு பாதுகாப்பு அளித்து வந்தனர். இதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்தனர். இதனால், போயஸ் கார்டனில், பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டு, தனியார் நிறுவனக் காவலாளிகள் பணிக்கு அமர்த்தப் பட்டனர்.

இந்தநிலையில், சில தினங்களுக்கு முன்னர் அ.தி.மு.க.வின் பொதுச் செயலராக சசிகலா தெரிவு செய்யப்பட்டார். இந்த நிலையில் அவர் முதல்வராகப் பொறுப்பு ஏற்பார் என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது. இதனால், போயஸ் கார்டனில், மீண்டும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது. (எ)

## உச்ச நீதிமன்றின் 44 ஆவது தலைமை நீதிபதி பதவியேற்பு



டில்லி, ஜன.05

இந்திய உச்சநீதிமன்றத்தின் 44 ஆவது தலைமை நீதிபதியாக ஜகதிஷ் சிங்கேஹார் நேற்று பதவியேற்றார். ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக்காலை நடைபெற்ற விழாவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவருக்குப் பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புறுதிப் பிரமாணமும் செய்து வைத்தார். இந்தநிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். (எ)

## திரிபுராவில் நிலநடுக்கம்

இந்தியாவின் திரிபுராவில் நேற்று முன்தினம் பிற்பகல் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

திரிபுராவின் அம்பாசா மாவட்டத்தை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.5 ஆகப் பதிவாகியிருந்தது. இதன் தாக்கம் அயல் மாநிலங்களான அசாம் மற்றும் சிலிகுரியிலும் உணரப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்பாசா பிராந்தியத்தில் இருந்து வடகிழக்கில் 19 கி.மீ. தொலைவில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என அமெரிக்கப் புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. (எ)

## பொங்கலுக்காக மண்சிலைகளை வடிவமைக்கும் 85 வயது முதியவர்!

புஞ்சைபுளியம்பட்டி, ஜன.05

ஈரோட்டில் பொங்கல் பண்டிகைக்காக 85 வயது முதியவர் ஒருவர் மண்சிலைகளை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

இயந்திரத்தைக் காட்டிலும் கைகளால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு பொருளிலும் ஒரு கலை நயம் இருப்பதை உணர முடியும். நாம் எத்தனை பரிமாண வளர்ச்சிக்கு அடி எடுத்து வைத்தாலும் மண்பானையில் சமைத்த உணவுக்கும், களிமண்ணால் உருவாக்கப்பட்ட சிலைக்கும் தனிச்சிறப்பு இருப்பதை உணர முடியும்.

ஆனால் களிமண்ணால் சிலைகளை வடிவமைக்கும் தொழில் நலிவடைந்து வருவதை யாராலும் மறுக்க முடியாது.

இப்படிப்பட்ட கலை உணர்வு உடைய தொழிலை மீட்டெடுக்க அயராது பாடுபட்டு வருகிறார் 85 வயது முதியவர் ஒருவர். ஈரோடு மாவட்டம், புஞ்சைபுளியம்பட்டி அருகே அலங்காரிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி என்ற முதியவர் தன்னுடைய வாழ்நாளில் ஆயிரக்கணக்கான களிமண் சிலைகளை வடிவமைத்து உள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து கூறுகையில்:

''வானம் பார்த்த பூமியாக இருக்கும் எங் களுடைய கிராமத்தில் மண்பானைகள், அகல் விளக்குகள், சாமி சிலைகள் ஆகியவற்றைப் பரம்பரையாகச் செய்து வருகி றோம். இந்த காலக்கட்டத்திலும் மண்பாண்டம் தொடர்பான பொருள்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆனால் தொழில் செய்வதற்கு தான் ஆள்கள் கிடையாது.

நான் சிறுவயதில் இருந்தே இந்தத் தொழிலைச் செய்து வருகிறேன். ஆனால் தற்போது இளைஞர்கள் யாருமே இந்தத் தொழிலைச் செய்வதில்லை என்பதுதான்வருத்தமளிக்கிறது.



யாருமே தொழிலுக்கு முன் வராததால் நான் இந்தத் தொழிலை விடாமல் செய்து வருகிறேன்.''- என்றார். (எ)

## அவசரகாலச் சட்டம் துருக்கியில் மேலும் 3 மாதங்கள் நீடிப்பு

அங்காரா, ஜன.05

துருக்கியில் அவசர காலச் சட்டம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டு அரசைக் கவிழ்க்க நடைபெற்ற கலகத்தை அடுத்து, கடந்த ஜூலை மாதம் நாடு முழுவதும் இந்த அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதனை மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

பத்திரிகை மற்றும் இதர ஊடகங்களின் செய்திகளைத் தணிக்கை செய்யவும், தேவை ஏற்பட்டால் நாடாளுமன்றத்தின் ஒப்புதலை பெறாமலேயே சில முக்கிய சட்டங்களை இயற்றவும் இந்த அவசர காலச் சட்டம் பிரதமருக்குத் தனி அதிகாரத்தை வழங்கியுள்ளது. (எ)

# பிலிப்பைன்ஸில் சிறை தகர்ப்பு; கைதிகள் 158 பேர் தப்பியோட்டம்!

## அதிகாலையில் பிரவேசித்த ஆயுததாரிகள் காவலர்கள் மீது கண்டபடி சூடு!!

மணிலா, ஜன.05

பிலிப்பைன்ஸின் கிடாபவான் நகரில் உள்ள சிறைச்சாலைக்குள் ஆயுததாரிகள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். அதில் அங்கிருந்த நூற்றுக்கும் அதிகமான கைதிகள் தப்பியோடினர் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.



கோட்டபாட்டோ மாவட்டத்தின் கிடாபவான் நகரில் உள்ள சிறைச்சாலைக்குள் நேற்று அதிகாலை திடீரென நுழைந்த ஆயுததாரிகள், காவலர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதன்பின்னர், குறிப்பிட்ட சில சிறை அறைகளைத் தகர்த்த அவர்கள், அதில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளை விடுவித்தனர். மொத்தமாக அங்கிருந்த ஆயிரத்து 511 கைதிகளுள் 158 பேர் தப்பியோடினர். எனினும் நால்வர் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, ஆயுததாரிகள் முஸ்லிம் இயக்கங்களுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

கிறிஸ்தவப் பெரும்பான்மை நாடாக விளங்கும் பிலிப்பைன்ஸில் கடந்த ஓரிரு தசாப்தங்களாக முஸ்லிம் கிளர்ச்சிக் குழுக்கள் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கி வருகின்றன.

இதைத் தடுக்கும் முகமாக அந்தநாட்டு ஜனாதிபதி ரொட்ரிகோ டியூடர்தே முஸ்லிம் கிளர்ச்சிக் குழு உறுப்பினர்களை சிறை வைக்கப் பணித்துள்ளார். இதன்படி தடுத்து வைக்கப்பட்டவர்களையே ஆயுததாரிகள் விடுவித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது. (எ)

## சிலியில் காட்டுத் தீ; 100 மரவீடுகள் தீக்கிரை

சான்டியாகோ, ஜன.05

சிலி நாட்டின் துறைமுக நகரமான வால்பரைசோ அருகே பரவிய காட்டுத் தீயால் சுமார் 100 மர வீடுகள் எரிந்து சாம்பராகின.

வால்பரைசோவின் அருகே உள்ள மலைப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் தீப்பிடித்தது.

லகுனா வெர்தே பகுதியில் பற்றிய இந்தத் தீ, காற்றின் வேகம் காரணமாக பிளாயா அஞ்சா மலைப்பகுதிக்குப் பரவியது.

அந்தப்பகுதியில் ஏராளமான மக்கள் வசித்து வருகின்றனர்.

தீ பரவியதை அடுத்து தீயணைப்பு வீரர்கள், வனத் துறையினர் மற்றும் இராணுவ வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பொது மக்களை வெளியேற்றிவிட்டு தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் 400 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெளியேற்றப்பட்டனர். அப்போது 19 பேர் மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டனர்.

சுமார் 100 மர வீடுகள் தீயில் கருகிச் சேதமடைந்தன. (எ)

## அமெ.நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவை சபாநாயகராக மீண்டும் பால் ரியான் தெரிவு



வொஷிங்டன், ஜன.05

அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் அவைக்கான சபாநாயகராக பால் ரியான் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ரொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலிலும் குடியரசுக் கட்சி வேட்பாளர்களே பெருமளவில் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பதவி ஏற்றுக் கொண்டனர். நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அவைக்கான புதிய சபாநாயகரைத் தெரிவு செய்ய நடைபெற்ற தேர்தலில் தற்போதைய சபாநாயகரான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பால் ரியான் மற்றும் முன்னாள் சபாநாயகர் நான்சி பெலோசி ஆகியோர் போட்டியிட்டனர்.

அவர்களில் புதிய சபாநாயகரைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில் பால் ரியான் 249 வாக்குகளையும், நான்சி பெலோசி 189 வாக்குகளையும் பெற்றனர். இதையடுத்து, பால்ரியான் மீண்டும் சபாநாயகரானார். (எ)

## ட்ரம்ப் பதவியேற்றதும் ஒபாமாவின் அவசர சட்டங்கள் ரத்தாகலாம்?

நியூயோர்க், ஜன.05

அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றவுடன் ஒபாமா இயற்றிய பல அவசர சட்டங்களை ரத்து செய்வார் என்று ட்ரம்ப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ட்ரம்ப், எதிர்வரும் 20 ஆம் திகதி பதவியேற்க உள்ளார். எனவே ஆட்சிமாற இருக்கும் நிலையில், ஒபாமா அவசர கதியில் சில முடிவுகளை எடுத்து வருகிறார். அடுத்து வரும் ஜனாதிபதிக்கு கொள்கை ரீதியான நெருக்கடியை ஏற்படுத்த அது போன்ற முடிவுகளை ஒபாமா எடுத்து வருகிறார் என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'ஒபாமாகேர்' என்று அழைக்கப்படும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் மிக அதிகளவில் பயனாளிகளைச் சேர்ப்பது, தேர்தலில் தலையீடு-உளவுக் குற்றச்சாட்டின் பேரில் ரஷ்ய அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற்றியமை போன்ற ஒபாமாவின் நடவடிக்கைகளை உதாரணமாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில், ஒபாமாவின் பல அவசர சட்டங்களும் முடிவுகளும் மறுபரிசீலனை செய்யப்படும் என்ற ட்ரம்ப்பின் செய்தித் தொடர்பாளர் ஷான் ஸ்பைசர்கூறினார். ஏ.பி.சி.செய்தி தொலைக் காட்சிக்குப் பேட்டி அளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (எ)

## பிஜி தீவில் நில அதிர்வு

பிஜி தீவில் நேற்று அதிகாலை 7.2 ரிச்டர் அளவிலான பயங்கர நில நடுக்கம் தாக்கியது. நில நடுக்கத்தை அடுத்துவிடுக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கைசிறிது நேரத்துக்குப் பின்னர் திரும்பப் பெறப்பட்டது. பிஜி தீவுகளின் தலைநகர் சுவாவில் இருந்து சுமார் 282 கிலோ மீற்றர் தூரத்தில் பூமியின் அடியில் 15 கிலோ மீற்றர் ஆழத்தில் நேற்றுக் காலை பயங்கரமான நில நடுக்கம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## காம்பிய தேர்தல் ஆணையார் நாட்டை விட்டு தப்பி ஓட்டம்!

காம்பியாவின் தேர்தல் ஆணையாளர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளார்.

கடந்த மாதம் முதலாம் திகதி நடைபெற்ற தேர்தலில் காம்பியாவின் ஜனாதிபதி யஹ்யா ஜமேக் தோல்வியடைந்தார் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக இவ்வாறு தேர்தல் ஆணையாளர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லத் தீர்மானித்துள்ளார். தேர்தல் ஆணையாளர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அடமா பரோ வெற்றியீட்டினார் என்று அறிவித்திருந்தார். முன்னதாகத் தேர்தல் தோல்வியை ஒப்புக்கொண்ட ஜனாதிபதி யஹ்யா ஜமேக் பின்னர் ஆட்சியை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று அறிவித்து சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார். (எ)

## சீனாவில் இருந்து லண்டனுக்கு நேரடி ரயில்; 12 ஆயிரம் கி.மீற்றரை 18 நாளில் கடக்கும்

லண்டன், ஜன.05

ஐரோப்பாவுடனான தனது வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வதற்காக, ரயில் சேவை மூலம் நேரடியாக லண்டனுக்கே பொருள்களை அனுப்பத் தொடங்கியுள்ளது சீனா.

இதன்படி, பொருள் வர்த்தகத்தில் முன்னணியில் விளங்கும் சீனாவின் யிவு நகரில் இருந்து முதன்முறையாக ரயில் ஒன்று பொருள்களுடன் லண்டன் நோக்கிப்புறப்பட்டுள்ளது.

சுமார் 12 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவை பதினெட்டே நாள்களில் இந்த ரயில் கடந்து விடும் என்று சீனா தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தின்போது குறித்த ரயில் கஸகஸ்தான், ரஷ்யா, பெலாரஸ், போலந்து, ஜேர் மனி, பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ் வழியாக லண்டனைச் சென்றடையும்.

ஐரோப்பாவுடன் நெருங்கிய வர்த்தக உறவுகளைப் பேணி வரும் சீனா ஏற்கனவே சில ஐரோப்பிய நாடுகளுக்கு ரயில் வழியாகப் பொருள்களை அனுப்பி வருகிறது. அந்த வரிசையில், லண்டனும் தற்போது இணைந்துள்ளது.

ரயில் மூலம் பொருள்களை அனுப்புவது வான்வழி அனுப்புவதைவிட 50 சதவீதம் செலவைக் குறைக்க முடியும் என்பதுடன், கப்பல் மூலம் அனுப்புவதை விட 50 சதவீத கால விரயத்தையும் தவிர்க்க முடியும் எனவும் இந்தச் சேவையை நடத்திவரும் யிவுடைமெக்ஸ் இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மன்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொகுப்பு :- க.மு.தர்மராசா, பிரசித்த நொத்தாரிசு.



தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகத் தனது உயிரை நீத்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 17 ஆம் ஆண்டு நினைவுதினம் இன்றாகும். அவர் பற்றி பல நினைவு மலர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. அவற்றை எல்லோரும் வாசித்திருக்க முடியாத காரணத்தால் அந்த நினைவு மலர்களிலிருந்து சிலவற்றை இன்றைய அவரின் நினைவு தினத்தில் வெளியிடுவது பொருத்தமானதாகும்.

# ஆண்டாண்டாயினும் மறக்க முடியாத மாமனிதர்!

2000ஆம்ஆண்டு அருட்தந்தை கலாநிதி எம்.ஜே.இம்மானுவேல் தெரிவித்திருந்தவை:-

குமாருக்கு வாழ்வதற்கெனநீர்வழங்கிய அறுபது ஆண்டுகளுக்காக ஆண்டவரே நான் உமக்கு நன்றி செலுத்துகின்றேன். நீளத்தில் அது ஆக அறுபது ஆண்டுகளாகஇருக்கும் போதிலும் குமாரது வாழ்வு உலகளாவ அகன்று அமைய நீர் அவரை ஆசீர்வதித்திருக்கிறீர். அவர் தனது அன்பை அனைத்துத் தமிழர்களாகிய எமக்காகவும் இடையறாது பரவச் செய்தார், உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஈழத்தில்வாழ்வோர், வெளியே வாழ்வோர் இன்று ஈழத்தில் வாழ்வோர், இனி மேல் வாழப் போவோர் என்று எல்லோருக்குமே குமார் தனது அன்பைப் பிரவாகித்து ஓடச் செய்தார். ஆண்டவரே, குமாரின் வாழ்வு துணிகரமான ஒருசேவையாகும். அது ஏழைகளின் மீதும் துன்பப்படுவோர் மீதும் நீர் கொண்ட அன்புக்கு ஒரு சான்றாக அமைந்தது. அது உமது உண்மை, நீதி என்பனவற்றைக் காப்பாற்றுவனவாக அமைந்தது. கொலை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை என்பவற்றுக்குப் பலி யாகும் ஆயிரக்கணக்கானோரைப் பாதுகாப்பதற்கானவாழ்வாக அது அமைந்தது.

ஆண்டவரே ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில், குமார்எதனை நம்பினாரோ அதாவது 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை - அதையே நானும் நம்புகின்றேன். ஆனால் ஆண்டவரே உண்மைக்கும் நீதிக்குமாகப் போராடும் துணிவு தமிழர்களாகிய எம்மத்தியில் மிகவும் அரிதான ஓர் அம்சமாகவே உள்ளது. வேறெதற்காகவுமின்றி, நீதிக்கும் சமாதானத்துக்குமான தாகத்துடன் ஏங்கிக் கொண்டிருக்கும் உமது மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் துணிவுமிக்க அர்ப்பணிப்பு உணர்வை எனக்கும் என் சக தமிழ் மக்களுக்கும் தந்தருளும்!

குமாரின் வாழ்வின் நீளமும், அகலமும் ஆண்டவரே உம்முள் அவரது வாழ்வின் ஆழத்தைப் பிரதிபலிப்பன அல்லவோ! உண்மைக்கும் நீதிக்குமாகச் சேவையாற்ற எத்துணை ஆழமான பற்றுறுதியை அவர் கொண்டிருந்தார்! அநீதிக்குப் பலியாவோரின் பாதுகாப்புக்காக குமார் தனது கல்விச் செல்வத்தையும் ஆளுமையையும், துணிவாகவும் புத்திசாதுரியமாகவும் பிரயோகித்திருக்கின்றார்! குமாரின் பற்றுறுதி, அவரது வாழ்வின் உறுதிக்கான ஒவ்வொரு நார்களிலும் ஊடறுத்து வியாபித்து நின்றது. அவரது சொற்கள், உண்மைக்கும் நீதிக்குமான இமாலய உணர்ச்சிகளுக்குப் பிறப்புக் கொடுத்தன. ஆண்டவரே, நீர் அளித்த அந்தப் பற்றுறுதியுடனும், உணர்ச்சியுடனும் தான் குமார் தனது எதிரிகளுக்கு முகங்கொடுத்தார்! அதிகார பலத்துடனும், வல்லமையுடனும் இருந்தவர்களுக்குச் சவால் விடுத்தார்! தமிழர்களாகிய எமக்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்ற குமாரின் வேணவாவும் உணர்ச்சியுமன்றோ உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுடைய இதயங்களைத் தொட்டுச் சென்றன! ஆண்டவரே! அந்த உணர்ச்சியையும், பற்றுறுதியையும், துணிவையும் நாம் எதனைச் சரியென்று நம்புகின்றோமோ அதற்காக எழுந்து நின்று குரல் கொடுப்பதன் பொருட்டு எமக்கும் அருள்வீராக!

ஆண்டவரே, குமார் ஒரு நம்பிக்கையுள்ள மனிதர்! அவர் எப்போதும் உம்மீது தான் தங்கிருப்பதை வெளிப்படுத்துவார்! ஒவ்வொரு காலைப் பொழுதுகளிலும், கறுவாத்தோட்டத்து உயர் குழாத்தினரும், பெருந்தகைகளும், உயர் தொழில் வல்லுநர்களும் தமது உயர்வான அலுவலகங்களை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும்போது, குமார் உமக்கு முன்னால் தலை தாழ்த்தி வளைந்து உமக்கு வணக்கஞ் செலுத்திக் கொண்டிருப்பார்!

குமார் சென்றுவிட்டார்! ஆண்டவரே, நான் உம்மிடம் இதனைக் கேட்கத் தூண்டப்படுகிறேன்! நீதிக்கும் உண்மைக்கும் விரும்பித் துரோகம் செய்யும் பல கோழைகளைத் தமிழினம் கொண்டிருப்பதற்குக் காரணம் உம்முடைய சாபமா ஆண்டவரே!

இல்லையென்றுதான் நான் நம்புகின்றேன். ஏனெனில், நீரே எமக்கு ஒரு குமாரைத் தந்தீர்! நீரே எமக்கு ஓர் அச்சமற்ற தலைவரைத் தந்தீர்! தனது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் துணிந்து நின்ற உண்மையின் புதல்வனை நீரே எமக்குத் தந்தீர்! நிச்சயமாக, நீர் எம்மை நட்டாற்றில் அநாதைகளாக விடப் போவதில்லை! ஆண்டவரே! குமாரை நிரந்தரமாக மௌனத்துக்குள் தள்ளிய எதிரிகளையும், கோழைகளையும் நீர் மன்னித்தருளும்! நாம் வழக்கமாக, இந்த எதிரிகளும், கோழைகளும் ஏதோ ஒரு கோட்டுக்கு அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் என்றுதான் நினைக்கத் தூண்டப்படுகின்றோம். ஆண்டவரே! குமார் பலியாகக் காரணமாய் இருந்த இவர்களது கோழைத்தனத்தை அகற்ற நீர் எமக்கு உதவுவீராக! ஒருவருடன் ஒரு நெருக்கமாகி, நிமிர்ந்து நின்று, எழுந்துநின்று உண்மை, நீதி சமாதானத்துக்கான தாகத்துடன் தவிக்கும் உமது மக்களுக்குச் சேவையாற்ற எமக்கு உதவுவீராக!

எமது நினைவுகளில் மட்டுமன்றி, எமது வரலாற்றில் மட்டுமன்றி, ஈழத்தின் ஆத்மாவிலும் ஒவ்வொரு தமிழனது இதயத்திலும், எண்ணத்திலும் குமார் வாழ்ந்து கொண்டு இருப்பாராக!

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன குரு சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் தெரிவித்திருந்தமை:-

''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்''

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலை நிற்க வல்லது வேறொன்றும் இல்லை என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்காக வாழ்ந்தவர் குமார் பொன்னம்பலம். ஆண்டாண்டாயினும் மறக்க முடியாதவர். தந்தையின் புகழை விஞ்சியவர். சமயப்பற்றும் ஆலய வழிபாடும் தவறாதவர். சிறந்த நியாயவாதியாகத் திகழ்ந்தவர். நீதியையும் நியாயத்தையும் சொல்லும் நாவுடையவர். வாழ்ந்த காலத்திலும் புகழ், மறைந்தும் புகழ் அவரை அடைந்தது. கற்றார்க்கும் உற்றார்க்கும் உறுதுணையானவர். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் துணிவுடமை ஆகிய குணங்கள் நிறைந்த பெருமையுடையவர். ஊழின் பெருவலி மறைந்து விட்டது. மாமனிதனாக வாழ்ந்து மறைந்தார். புகழ் வானழாவியது. இன்றும் என்றும் நீங்காது மறைந்த அமரர் ஜி.ஜி.புகழ், மகன் தந்தைக்கு ஆற்றியது போல் அவ்வழி இவர் மைந்தர் வர அவர் நினைவு நாளில் எமது நல்லாசியை கூறுகின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி 15.01.2001 இல் தெரிவித்தவை:-

எமதுயாழ்மண்ணில் சரித்திர நாயகராக விளங்கிய அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் ஏக புத்திரனாக விளங்கியவர் அமரர் குமார் பொன்னம்பலம். சிங்கப்பூருக்கு நான் சென்றிருந்த காலத்தில் நீதியரசர் குலசேகரம் வீட்டில் இவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்புப் பெற்றேன். உயர்ந்த உள்ளமும், உறுதியான பேச்சும், கலகலத்த சிரிப்பும், கண்ணியமான போக்கும் இவரிடத்திலே அமைந்திருந்தமையை நான் நன்கு அறிந்து கொண்டேன்.

''தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல்'' என்ற திருக்குறளை இவர்களின் வாழ்வோடு இணைத்துப் பார்க்கலாம். அது மட்டுமன்றி-

''மகன் தந்தைக்காற்றும் உதவி இவர் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்'' என்ற குறட்பாவின் கருத்தின்படி தன் பெற்றோருக்கு பெருமதிப்பு தேடிக்கொடுத்தவர் அமரர் குமார் பொன்னம்பலம்.

தமிழர்களின் தலைவிதியைப்பற்றி நொந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு சோதனை ஏற்பட்டது என்று அன்னாரின் மறைவைக் குறித்து அரற்றுகின்றார்கள் பலர். தமிழினத்தின் தலைவிதி சோக நிலையில் போய்க்கொண்டிருக்கிறது.

நீதி, உண்மை, அமைதி என்பன அர்த்தமற்றுப் போய்விட்டன. இதைப்பற்றி எடுத்துப் பேசுபவர்கள் இன்று அருகிவிட்டனர். நீதிக்குக் குரல் கொடுப்பவர்கள் யார் என்று ஏங்கி நின்ற பொழுது அபயமாகக் குரல் தந்தவர் குமார் பொன்னம்பலம். இன்று அந்தக் குரலும் ஓய்ந்து விட்டது. என்ன செய்வோம் எவர்க்குரைப்போம் என்ற நிலையில் எமது தமிழினம் தடுமாறுகிறது.

என்றாலும் அமரரின் ஆத்மா எமது விடிவுக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையோடு வாழ வேண்டியதுதான். காலம் எமக்கு நல்ல பதிலைத் தரும் என்று எதிர்பார்த்து அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக. ★★★



# 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்காக வீர, வீராங்கனைகளுக்கு தீவிர பயிற்சிகள்!

## விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜன.05

2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பங்குகொள்ளும் இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு தீவிர பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளையாட்டுத்துறைச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் மற்றும் 2017ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத்துறை நாள்காட்டி வெளியீடு கொழும்பிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-





விளையாட்டுத்துறை அமைச்சின் செயற் திட்டங்களுக்கு அமைய தேசிய விளையாட்டுத்துறைச் சங்கங்கள் துரித செயற்பாடுகளில் இறங்கவேண்டும்.

பெரும்பாலான சங்கங்கள் எமது அமைச்சின் செயற் திட்டங்களுக்கு ஈடுகொடுத்துச் செயற்படத் தவறிவருவது ஏற்புடையதல்ல. எனவே அனைத்து சங்கங்களும் விளையாட்டுத்துறையின் நலன்கருதி வினைத்திறனுடன் செயற்பட வேண்டும்.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி இன்னும் மூன்று வருடங்களில் டோக்கியோவில் நடைபெறவுள்ளது. ஒலிம்பிக் விளையாட்டு விழாவுக்கான இலங்கை வீர, வீராங்கனைகள் இவ் வருடத்திலிருந்தே தயார் படுத்தப்படவுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பதக்கங்கள் வெல்வதைக் குறிக்கோளாகக் கொண்டு வீர, வீராங்கனைகளை இவ் வருடத்திலிருந்தே தயார் செய்யவுள்ளோம். ஒலிம்பிக் நெருங்கும் காலத்தில் சில மாத பயிற்சிகளில் ஈடுபடுவதால் எவ்வித அர்த்தமும் இல்லை.

இவ் வருடத்திலேயே வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய்து தேவையான நிதியை ஒதுக்கி அவர்களுக்கு தீவிர பயிற்சிகளை வழங்குவோம்.

எனவே, திறமைவாய்ந்த வீர, வீராங்கனைகளின் தரவுகளை வியைாட்டுத்துறைச் சங்கங்கள் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடப் பிற்பகுதியில் சர்வதேச வியைாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற இலங்கை வீர, வீராங்கனைகளுக்கான பணப்பரிசுகளையும் இந்த நிகழ்வில் அமைச்சர் வழங்கினார்.

கெரம், பளுதூக்கல் ஆகிய சர்வதேச போட்டிகளில் வெற்றிபெற்றமைக்காக இந்தப் பணப்பரிசுகள் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொதுநலவாய சிரேஷ்ட, கனிஷ்ட இளையோர் பளுதூக்கல் போட்டியில் பதக்கம் வென்ற யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஆஷிகாவுக்கும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர பணப் பரிசை வழங்கியுள்ளார்.

# ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி: வல்வெட்டித்துறை கருணாகரனை வீழ்த்தியது மணற்காடு சென்.அன்ரனிஸ்

பருத்தித்துறை, ஜன.05

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் மணல்காடு சென். அன்ரனிஸ் வி.கழக 'பி' அணி வெற்றி பெற்றுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது.

விலகல் முறையில் நடத்தப்படும் இந்தத் தொடர் கடந்த 24 ஆம் திகதி திக்கமுனை மைதானத்தில் ஆரம்பமானது.

கழகத்திற்கு 7 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித் தொடர் 'அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்' ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி' என சிறப்பாக பெயரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.











இவ் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் மாலை 5.20 மணிக்குப் போட்டி ஒன்று இடம்பெற்றது. இந்தப் போட்டியில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி, வல்வெட்டிதுறை கருணாகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர் கொண்டது.

போட்டி ஆரம்பித்து 51 செக்கனில் கருணாகரன் அணியின் முன்கள வீரர் ப. இளவரசன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். தொடர்ந்து விளையாடிய சென். அன்ரனிஸ் அணியினர் கோல்களைப் போடத் தொடங்கினர்.

இதனால், 2 ஆவது, 15 ஆவது, 16 ஆவது, நிமிடங்களில் அந்த அணியின் முன்கள வீரர் அ.றெயினோல்ட் தனது அணிக்கான அடுத்தடுத்து 3 கோல்களைப் பெற்றுக் கொடுத்தார். அத்துடன் 19 ஆவது நிமிடத்தில் முன்கள வீரர் ம. சுஜிபன் தனது அணிக்கான 4 ஆவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இவ்வாறு சென். அன்ரனிஸ் அணியின் ஆதிக்கத்துடன் முதல்பாதி ஆட்டம் முடிவுக்குவந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் வல்வெட்டிதுறை கருணாகரன் அணியினர் தற்காப்பு ஆட்டத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

இதனால், சென். அன்ரனிஸ் அணியின் முன்கள வீரர்கள் கருணாகரன் அணியின் தற்காப்பு வீரர்களை உடைத்து கோல்கள் போட பலத்தை எதிர்ப்பை சந்திக்க நேர்ந்தது.

இருப்பினும் 26 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் வீரர் அ.றெயினோல்ட் தனது அணிக்கான மேலும் ஒரு கோலை பெற்றுகொடுத்தார். போராடிக் கொண்டிருந்த கருணாகரன் அணியின் முன்கள வீரர் ம. மதுசன் தனது அணிக்கான ஒருகோலைப் பெற்றுக் கொடுத்தார். 36 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் அணியின் வீரர் ம. சுஜிபன் தனது அணிக்காக ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.

இறுதியாக போட்டி 6:08 மணிக்கு முடிவுக்கு வரும் போது, மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி, 6 கோல்களைப் போட்டு வெற்றிபெற்று தொடரில் தனது இடத்தை தக்கவைத்துக்கொண்டது.

வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழக அணி 2 கோல்களை மட்டும் போட்டதனால் தோல்வியுற்றுத் தொடரிலிருந்து விலகிக்கொண்டது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சென். அன்ரனிஸ் அணியின் வீரர் டிலக்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)

# இலங்கை – தென்னாபிரிக்கா இரண்டாவது டெஸ்ட்; தென்னாபிரிக்க அணி மிக வலுவான நிலையில்!

இலங்கை–தென்னாபிரிக்கா அணிகள் போட்டியிடும் இரண்டாவது டெஸ்ட் கடந்த திங்கட்கிழமை கேப்டவுனில் ஆரம்பமாகியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாம் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் விக்கெட்டுக்கள் இழப்பின்றி 35 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் தொடர் ஆட்டம் நேற்றுத் தொடங்கியது. இதில் குக் 50 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்று லக்மாலின் பந்தில் கருணாரட்ணவிடம் பிடி கொடுத்தார். அவரைத் தொடர்ந்து எல்கர் 91 பந்துகளை எதிர்கொண்டு 55 ஓட்டங்களுடன் ஹேரத்தின் பந்துவீச்சில் மத்தியூஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரை அடுத்து வந்த அம்லாவும் 5 பந்துகளை மாத்திரம் சந்தித்து ஓட்டங்கள் எவற்றையும் பெறாமல் வெளியேறினார்.

தொடர்ந்து டுமினி 30 ஓட்டங்களுடன் லக்மாலின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

அவரை அடுத்து டுபிளேசிஸ் 49 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்று லக்மாலின் பந்துவீச்சில் சந்திமாலிடம் பிடி கொடுத்தார்.

பவுமா 4 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு ஓட்டங்கள் எவற்றையும் பெறாமல் ஏமாற்றினார். அவரைத் தொடர்ந்து குமார, டி கொக்கை 29 ஓட்டங்களுடன் வெறியேற்றினார்.

இரண்டாம் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. அப்போது மகாராஜ் 20 ஓட்டங்களையும் பிளேண்டர் 15 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் ஆட்டமிழக்காது இருந்தனர்.

பந்துவீச்சில் லக்மால் 4 விக்கெட்டுக்களையும், குமார மற்றும் ஹேரத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாம் இன்னிங்ஸுக்காக இலங்கையின் கருணாரட்ண மற்றும் சில்வா ஆகியோர் களமிறங்கினர்.

19 பந்துகளை எதிர்கொண்டு 6 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் இருந்த கருணாரட்ண பிளேண்டரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.



அவரைத்தொடர்ந்து சில்வா 70 பந்துகளில் 29 ஓட்டங்களைப் பெற்று றபாடாவின் பந்தில் குக்கிடம் பிடி கொடுத்தார்.

மெண்டிஸ் 4 ஓட்டங்களுடன் பிளேண்டரின் பந்துவீச்சில் வெளியேறினார். சில்வாவை றபாடா 22 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 130 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மத்தியூஸ் 29 ஓட்டங்களுடனும், சந்திமால் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்று பந்துவீச்சில் பிளேண்டர் மற்றும் றபாடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட்:
## ஆஸ்திரேலியா 8 விக்கெட் இழப்புக்கு 538 ஓட்டங்களை குவித்தது!

சிட்னி, ஜன.05

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட் இழப்புக்கு 538 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் 2 டெஸ்டிலும் வென்று ஆஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றியது.

பிரிஸ்பேனில் இடம் பெற்ற முதல் டெஸ்ட்டில் 39 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், மெல்போர்னில் நடந்த 2 ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் அந்த அணி வெற்றி பெற்று இருந்தது.



ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகள் மேலும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதலில் ஆடிய ஆஸ்திரேலியா முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 365 ஓட்டங்களைக் குவித்து இருந்தது.

தொடக்க வீரர்கள் வோர்னர், மேட் ரென்ஷா ஆகியோர் சதம் அடித்து இருந்தனர். வோர்னர் 113 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். ரென்ஷா 167 ஓட்டங்களிலும், பீட்டர் ஹேன்ட்ஸ் 40 ஓட்டங்களிலும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் இடம்பெற்றது. ஆஸ்திரேலியா தொடர்ந்து விளையாடியது. அபாரமாக விளையாடி வந்த ரென்ஷா 184 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். 293 பந்துகளில் 20 பவுண்டரியுடன் அவர் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

பீட்டர் ஹேண்ட்ஸும் 3 ஆவது வீரராக இந்த டெஸ்டில் சதம் அடித்தார். அவர் 110 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். 4 ஆவது டெஸ்டில் விளையாடிய அவருக்கு இது 2 ஆவது சதமாகும். வகாப்ரியாஸ் 3 விக்கெட்டுகளும், இம்ரன்கான், அசார்அலி தலா 2 விக்கெட்டுகளையும் எடுத்தனர்.

ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 538 ஓட்டங்களைக் குவித்து டிக்ளேர் செய்தது. பின்னர் பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸை விளையாடியது. 6 ஓட்டங்கள் எடுப்பதற்குள் அந்த அணி 2 விக்கெட்டை இழந்தது. 41 ஆவது ஓவரில் பாகிஸ்தான் அணி இரண்டு விக்கெட்டுகள் இழப்புக்கு 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# நெடியகாடு விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி இன்று!

யாழ்ப்பாணம், ஜன.05

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.

இப் போட்டிகள் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று மாலை 3:30 மணிக்கு இடம்பெறும் போட்டியில் கரவெட்டி கலட்டி ஐக்கிய அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதவுள்ளது.

அதேவேளை, இன்று மாலை 4:30 மணிக்கு நடைபெறும் மற்றுமொரு போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியை எதிர்த்து வலிகாமம் விளான் சென். அன்ரனீஸ் அணி மோதவுள்ளது.

# பதவிக்கு தகுதி இல்லை!

கொல்கத்தா, ஜன.05

இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்கு எனக்கு தகுதி இல்லை என்று கங்குலி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


கிரிக்கெட் சபை தலைவர் பதவிக்கு எனது பெயர் தேவையில்லாமல் இழுக்கப்பட்டுள்ளது. நான் அதற்கு தகுதியானவன் இல்லை. பெங்கால் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியை நான் ஏற்று ஒரு ஆண்டு தான் ஆகிறது. இன்னும் 2 ஆண்டுகள் இந்த பதவி இருக்கிறது. இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்கான போட்டியில் நான் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# மீள் வருகையில் செரீனா வெற்றி!

நியூயோர்க், ஜன.05

உபாதை காரணமாக நான்கு மாதங்கள் டென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றுவந்த செரீனா வில்லிம்ஸ் தனது மீள் வருகையில் ஓக்லண்டில் வெற்றிபெற்றுள்ளார்.

ஓக்லண்டின் நடைபெற்றுவரும் ஏ.எஸ்.பி. கிளசிக் டென்னிஸ் போட்டிகளின் முதல் சுற்று ஆட்டத்தில் பிரான்ஸ் வீராங்கனை போலின் பார்மெண்டியரை 6-3, 6 - 4 என்ற புள்ளிகளைக் கொண்ட 2 நேர் செட்களில் செரீனா வெற்றி கொண்டார்.





ரெடிட் நிறுவனத்தின் இணை ஸ்தாபகரான அலெக்சிஸ் ஒஹானியன் என்பவருடன் திருமண ஒப்பந்தத்திற்கான மோதிரம் மாற்றிக்கொண்டார் என்று செரீனா வில்லிம்ஸ் ஒரு வாரத்திற்கு முன்னர் அறிவித்திருந்தார்.

செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டிகளின் அரை இறுதிகளுடன் தோற்பட்டை மற்றும் முழங்கால் உபாதைகளினால் பீடிக்கப்பட்டிருந்த செரீனாவுக்கு மீள்வருகையில் கிடைத்த வெற்றி உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது.

சில கால ஓய்வுக்குப் பின்னர் மீண்டும் விளையாடும்போது சோர்வு ஏற்படுவது இயல்பு.

ஆனால், எப்படி விளையாடினால் வெற்றி பெற முடியும் என்பதை மனோ ரீதியாக அறிந்திருந்தேன்'' என வெற்றிக்குப் பின்னர் செரீனா தெரிவித்துள்ளார்.

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேச நீதிபதிகள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அறிக்கைசமர்ப்பிக்கும்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தஅறிக்கைமூன்றுமொழிகளிலும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. செயலணியின் தலைவர் மனோரி முத்தெட்டு வேகம அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்தார்.

அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பாதிக்கப்பட்டமக்களுக்குநீதி வழங்கும் பொறிமுறையில் கலப்புநீதிமன்றம்ஒன்று அமைக்கப்படவேண்டும். உள்நாட்டுமற்றும் சர்வதேச நீதிபதிகளைத் தெரிவு செய்யும் முறை நிபுணர்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் ஆலோசனையுடன் அரசமைப்புபேரவையால்வகுக்கப்பட வேண்டும்.

குறிப்பாகச் சர்வதேச நீதிபதிகளை பொறுத்தவரை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் ஆலோசனை பெறப்பட வேண்டும். அனைத்துவிடயங்களும் மக்களுடன் பகிரப்பட வேண்டும். தெரிவுசெய்யப்படும் நியமனங்களும் பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

தாமதங்களைத் தவிர்ப்பதற்காகப் போதியளவு எண்ணிக்கையான நீதிபதிகள் உள்ளடக்கப்படவேண்டும். ஒவ்வோர்அமர்விலும் பெரும்பான்மை தேசிய நீதிபதிகளும், குறைந்தபட்சம் ஒரு சர்வதேச நீதிபதியும் இருப்பதை நீதி மன்றம் உறுதிசெய்ய வேண்டும்.

நீதிபதிகள் சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களைப் பொறுத்தவரை எல்லா இனக்குழுக்களினதும் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டும்.

போர்க்குற்றங்கள், மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் உட்படப் பாலியல் வன்முறைக் குற்றங்களுக்கும், சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் விசேட நீதிமன்ற ஆணை வழங்கப்பட வேண்டும்.

விசேடசட்டத்தரணிகள்அலுவலகம் காலதாமதமின்றி அமைக்கப்படவேண்டும். இலங்கையில் இடம்பெற்றது எனக் கூறப்படும் சர்வதேச குற்றங்களின் பரப்பெல்லை, பாதிக்கப்பட்டவர்களின் பன்முகத் தன்மை, குற்றம் புரிந்தோரின் வகைகள் என்பவற்றைப் பிரதிபலித்து, சட்டத்தரணிகள் அலுவலகத்தின் தேர்வு வடிவமைக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு போன்ற அலுவலகங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த விசாரணை அலகில் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உட்பட முன்னாள் தமிழ் தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புகொண்டிருந்த முன்னாள்போராளிகளின்நிலைமை பரிசீலிக்கப்பட வேண்டும்.

காணிஉரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும். அரசகாணி பகிர்ந்தளிப்பில் சேர்க்கப்படாத மலையகத் தமிழர்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும்.

சிறுபான்மையினருக்கான உரிமைகளை உறுதிப்படுத்த ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்த ஆணைக்குழு அரசமைப்புப் பேரவையால் சிபாரிசு செய்யப்படும்பெயர்ப்பட்டியலில்இருந்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். – என்றுள்ளது. (ஐ)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) – என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷதெரிவித்துள்ளார். 2017ஆம்ஆண்டில் அரசாங்கத்தைக்கவிழ்ப்பேன்என்று மஹிந்தராஜபக்ஷ கூறியிருந்த நிலையில், அடுத்த வாரம் தான் சுவிற்ஸர்லாந்துசெல்லவுள்ளார் எனவும், அந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முடிந்தால் தனது ஆட்சியைக் கவிழ்க்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இது குறித்துகொழும்பு ஊடகமொன்று மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பியது. அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அரசாங்கத்துடனே எனக்கு கோபம் உள்ளது. மற்றபடி சர்வதேச சமூகத்துடனோ அல்லது குறிப்பாக சீனாவுடனோ எந்தவித கோபமும் இல்லை.

"தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்து கொள்கையற்ற தற்போதைய நல்லாட்சி அரசின் மீதே கடும் கோபமும் சாபமும் காணப்படுகின்றதே தவிர சீனா உள்ளிட்ட எந்தவொரு வெளிநாட்டுடனும் எனக்குப் பிரச்சினையில்லை.

"இலங்கைக்கு இது முக்கியமான வருடமாகும். ஜனநாயக ரீதியில் ஆட்சியை கவிழ்ப்போம்" என்றார் அவர்.

## யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பில் மக்களின் கருத்தறியும் செயலணியின் இறுதி அறிக்கை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே சம்பந்தன் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு சம்பந்தன் மேலும் கூறுகையில் –

போர்க்குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச நீதிபதிகளை நியமிக்க முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக உள்ளது என ஜனாதிபதி நினைக்கின்றமையால் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம்.

எனினும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பாக அமைக்கப்படும் விசாரணைப் பொறிமுறையானது நம்பகத்தன்மை வாய்ந்ததெனக் கருதி ஏற்றுக்கொள்வதற்குப் பாதிக்கப்பட்ட தரப்பினர் மறுப்பார்களாயின், என்ன நோக்கத்துக்காக விசாரணைப் பொறிமுறை அமைக்கப்படுகின்றதோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடும்.

போர்க்குற்ற விசாரணை தொடர்பில் இராணுவத்தினர் பீதியடைந்துள்ளனர். யுத்த காலத்தில் இடம்பெற்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சரணடைந்தவர்களைக் கொலை செய்த குற்றங்களுக்கு இராணுவத்தினரே பொறுப்புக்கூற வேண்டும்.

யுத்தத்தின்போது நிகழ்ந்த அனைத்துக் குற்றங்களுக்கும் அதற்கான கட்டளைகளை வழங்கியவர்களே பொறுப்புக் கூற வேண்டும். – என்றார்.

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதவியேற்பின்போது ஆராயப்பட்டன என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

திருகோணமலை சீனன்குடாவில் உள்ள பாரிய எண்ணெய்க் குதங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் இந்திய – இலங்கைத் தரப்புகளுக்குள் ஏற்பட்டுள்ள பிணக்குக் குறித்து குறிப்பிட்ட பிரதமர், அப்பிணக்கு சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி இணக்கம் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்.

திருகோணமலைத் துறைமுகமும் சுற்றுப்புறக் கரையோரங்களும் இந்தியா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளின் முதலீடுகளின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும் என்றார் அவர்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்துக்குக் கையளிக்கும்திட்டத்தைநியாயப்படுத்தி அவர் விளக்கமளித்தார்.

இந்தியாவுடனான பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (எட்கா) மற்றும் சீனா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகியவற்றுடனான திறந்த வர்த்தக ஒப்பந்தம் ஆகியன இந்த வருடம் செய்து கொள்ளப்படும் என அவர் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாறியுள்ளது. அந்த அரசமைப்புச் சபை, உத்தேச புதிய அரசமைப்பின் நகல் வடிவைத் தயாரிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் 21 பேர் கொண்ட வழிகாட்டல் குழுவை அமைத்துள்ளது.

வழிகாட்டல் குழு புதிய அரசமைப்பைத் தயாரிப்பது தொடர்பில் பன்னிரண்டு தலைப்புக்களை வரையறை செய்து அவற்றில் ஆறு தலைப்புக்கள் தொடர்பில் சிபாரிசுகளைச் செய்வதற்காக ஆறு உப குழுக்களையும் நியமித்துள்ளது.

எஞ்சிய ஆறு விடயங்களையும் வழிகாட்டல் குழு தானே கையாளவுள்ளதுஎனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிரவும் சிரேஷ்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் ஒருவிஷேட குழுவும்சிலவிடயங்களைஆராய்ந்து அறிக்கை தரவுள்ளது.

இந்நிலையில் இன்று கூடும் வழிகாட்டல்குழுபுதியஅரசமைப்புத் தொடர்பாக அரசியல் கட்சிகள் முன்னெடுத்துள்ள பரிந்துரைகள்பற்றியகவனம்செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் பரிந் துரைகள் இதுவரையில் கிடைக்கவில்லை என வழிகாட்டல்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தன்மை, தேர்தல்முறைமை, நிறைவேற்று அதிகாரத்தின் தன்மை, அதிகார பகிர்வு குறித்த அடிப்படைகள், மதம் மற்றும் காணிகள் போன்ற ஆறு விடயங்கள் இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட உள்ளன.

அடிப்படை உரிமைகள், நீதிமன்றம், நிதி, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, அரசசேவை போன்றவை தொடர்பான உப குழுக்களின் அறிக்கைகள் அரசமைப்புப் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அறிக்கைகள் தொடர்பிலும் இந்த மாதம் விவாதம்நடத்தப்பட்டுமக்களின்கருத்துக்களையும் உள்ளடக்கி, உத்தேச அரசமைப்பின் வரைவுத் திட்டம் உருவாக்கப்பட உள்ளதாகசெயற்குழுவின்உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 12 இந்திய மீனவர்களின் விளக்க மறியல் நீடிப்பு!

### மன்னார் நீதிமன்றம் உத்தரவு

மன்னார், ஜன.05

தலைமன்னார் தென் கடற்பரப்பில் மன்னார் கடல் ரோந்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு ஊடாக மன்னார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் பன்னிரண்டு பேரையும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கும்படி மன்



னார்மாவட்ட நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

கடந்த 21.12.2016 தலைமன்னார் தென் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழைந்து இரு இந்திய இழுவைப்படகுகளில் இறால், மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் எனத் தெரிவித்து பன்னிரண்டு இந்திய மீனவர்களை மன்னார் கடல்ரோந்து கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

கிறகோரி விக்ரர் (வயது 47), பிச்சையா லிபோர் (வயது 45), விக்ரர் அஜித்குமார் (வயது 23), அ.வினோத்குமார் (வயது 23), வி.அமலன் (வயது 47), பி.பிறவின் (வயது 28), ஜெயக்குமார் வெற்றிவேல் (வயது 35), இ.கிறிஸ்ரி (வயது 51), சே.பிச்சை (வயது 40), ஆ.பாண்டியராஜா (வயது 30), ப.மலையாண்டி (வயது 40), மை.மரிய அந்தோனி ரீகன் (வயது 30) ஆகிய பன்னிரண்டு இந்திய மீனவர்களுமே நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். முதலாவது விளக்கமறியல் உத்தரவு நேற்று முடிவடைந்ததை அடுத்து நேற்று நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

## மிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அபிவிருத்தித் திட்டத்தை வெளியிட்டு வைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

எவர், என்ன கூறினாலும் தற்போதைய அரசு சிறந்த புரிந்துணர்வுடன் முன்னோக்கிப் பயணிக்கும்.

சிலர் அரசுக்குள் ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்க முயற்சித்துவருகின்றனர். அவர்களின் அரசியல் எதிர்காலம் அழிந்து போய்விடும் என்பதால், அவர்கள் அப்படியான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் மாத்திரம் 10 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் உருவாகும். இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தும் போது தேர்தல்களில் வெற்றி பெறுவது என்பது பிரச்சினையாக இருக்காது.

பிராந்தியப்பொருளாதார அபிவிருத்திக்கான வழியைத் திறப்பது, உலக உற்பத்தி வலையமைப்பில் இணைதல், வர்த்தகங்களை ஆரம்பித்தல், முன்னேற்றத்துக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், மனித வள முதலீட்டை வலுப்படுத்தல் உட்பட 9 பிரதான யோசனைகளுடன் இந்தத் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஆட்சியின் போது இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களுக்கு கோட்டாபய ராஜபக்ஷ இடையூறுகளை ஏற்படுத்தினார். இதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரகசியச்சந்திப்புக்களை மேற்கொண்டார்.

சமாதானம் தொடர்பாக ஒரு நாள் சிலர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த இடத்துக்கு கோட்டாபய வருகின்றார் என்பதை அறிந்து கொண்ட மஹிந்த பதற்றமடைந்தார்.

"கோட்டாபய வருகிறார், தற்போது நீங்கள் செல்லுங்கள்" என மஹிந்தவுடன் உரையாடிக் கொண்டிருந்த சமாதான விரும்பிகளை மஹிந்த அனுப்பி வைத்தார்.

அதேவேளை அளுத்கம தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவுக்கமையவே மேற்கொள்ளப்பட்டது. – என்றார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள் ஆணையாளரிடமும் தெளிவாகக் கூறிவிட்டோம்.

நாங்கள் நியமித்த நல்லிணக்கச் செயலணியின் அனைத்துப் பரிந்துரைகளையும் பொறுப்பேற்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

இந்தச்செயலணியில் இருந்தவர்கள் விஞ்ஞான ரீதியில் மிகப்பெரிய உயரத்தில் இருப்பவர்களோ, அல்லது உயர்ந்த மட்டப் புத்திஜீவிகளோ அல்லர். எமது நாட்டைச் சேர்ந்தவர்களே செயலணியில் இடம்பெற்றுள்ளனர்.

எனவே இவர்களின் பரிந்துரைகளைக் கட்டாயம் ஏற்க வேண்டும் என்ற எந்தவொரு நியதியும் கிடையாது.

**ரவிராஜ் வழக்கு தீர்ப்பில் உடன்பாடு இல்லை!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் தீர்ப்புத் தொடர்பில் எனக்கும் உடன்பாடு இல்லை.

ரவிராஜ் மற்றும் அவரது பாதுகாவலர்கள் தம்மைத்தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டனர் என்ற சாரப்பட வழக்கின் தீர்ப்பு அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

இந்த வழக்கை மேன்முறையீடு செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு ஏற்ப இந்த வழக்கு விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கப் போவதில்லை. வெளிநாட்டு நீதிபதிகளின் தொழிநுட்பத்தைப் பயன்டுத்த முடியும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதியின் யாழ். விஜயம் ஒத்திவைப்பு: பல ஊடகங்களிலும் பலவிதமான செய்திகள்

யாழ்ப்பாணம், டிசெ.05

எதிர்பாராத சில சந்திப்புக்கள் கொழும்பில் இருந்தமையால் தான் ஜனாதிபதியின் யாழ். விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.

– இவ்வாறு ஜனாதிபதியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நேற்றுத் தெரிவித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணம் வருவதற்கு இருந்தார். அவரை வரவேற்க பெரும் எடுப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் நேற்றைய யாழ். விஜயத்தை ஜனாதிபதி ஒத்திவைக்கிறார் என நேற்று முன்தினம் மாலையில் திடீரென அறிவிக்கப்பட்டது.

"முன்னர் ஒழுங்குபடுத்தப்படாத திடீர் சந்திப்புகள் ஜனாதிபதிக்கு இருந்தமையாலேயே அவர் யாழ். விஜயத்தை ஒத்திவைத்தார் என அரசின் பேச்சாளர் தெரிவித்தார்.

"ஜனாதிபதி சிறிசேன – பிரதமர் ரணில் கூட்டு அரசை 2017 இல் கவிழ்ப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சூளுரைத்ததன் பின்னணியில் ஏற்பட்ட அரசியல் நிலைவரங்கள் காரணமாக ஜனாதிபதி தமது யாழ். விஜயத்தைத் தள்ளிப் போட்டிருக்கக் கூடும்." – இவ்வாறு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் –

"தெற்கு அரசியல் நெருக்கடியாலேயே ஜனாதிபதியின் யாழ். வருகை திடீர் ரத்து" – என்ற தலைப்பில் நேற்றைய 'காலைக் கதிர்' நாளிதழில் வெளியான முதலாம் பக்கத்தின் பிரதான தலைப்புச் செய்தி குறித்து கொழும்பிலிருந்து அரசுத் தரப்புப் பிரமுகர் ஒருவர் காலைக் கதிருடன் தொடர்பு கொண்டு பேசினார்.

"ஜனாதிபதி சுகவீனம் காரணமாகவே யாழ். விஜயத்தைத் திடீரென ரத்துச் செய்தார்" – என்று விளக்கமளித்தார் அவர்.

இதற்கிடையில் –

ஆந்திர பிரதேச முதல்வர் என்.சந்திரபாபு நாயடுவால் அனுப்பி வைக்கப்பட்ட இந்தியப் பிரதிநிதிகள் குழுவைச் சந்திக்கும் நோக்கிலேயே ஜனாதிபதியின் யாழ். விஜயம் தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது என இன்னொரு கொழும்பு ஊடகம் தெரிவித்தது.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆந்திரப் பிரதேச முதல்வர் என்.சந்திரபாபு நாயுடுவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைத் தேசிய அரசாங்கத்தின் இரண்டாம் வருடப் பூர்த்தி நிகழ்வில் கலந்து கொள்வற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆந்திர பிரதேச முதல்வர் என்.சந்திரபாபு நாயுடு நாளைமறுதினம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

– இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேசமயம் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுகயீனமுற்றுள்ளார் என சில இணையத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தியில் எந்தவித உண்மையும் இல்லையென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளதாக மற்றொரு ஊடகம் நேற்று தெரிவித்தது.

ஜனாதிபதிக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டதனால், அவர் மேற்கொள்ள விருந்த யாழ். விஜயமும் ரத்து செய்யப்பட்டதாக அவ்விணையத்தளங்கள் குறிப்பிட்டுள்ளன.

உண்மையில் ஜனாதிபதியின் வேலைப்பளு அதிகரித்தமையே யாழ். விஜயத்தை அவர் ரத்து செய்வதற்கான காரணம் எனவும் செயலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

யாழில் நேற்று நடைபெற விருந்த பாதுகாப்பு பிரதானிகளின் சந்திப்பு கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்றதாகவும் செயலக வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

– இவ்வாறு அந்த ஊடகச் செய்தி மேலும் குறிப்பிட்டது. (உ)

## குண்டுப் புரளி கிளப்பிய பெண்ணுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஜன.05

கொழும்புகோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணிக்க விருந்த இரவு நேர தபால் ரயிலில் குண்டுப் பொதியொன்று இருக்கின்றது என தொலைபேசியில் தொடர்பு கொண்டு பொய்யான தகவலைப் பொலிஸாருக்கு வழங்கியவர் எனக் கருதப்படும் யுவதியைக் கடுமையாக எச்சரித்த நீதிவான் அவரை இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு அனுமதியளித்தார்.

கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த யுவதியொருவர் தனது காதலனுடன் ஏற்பட்ட மனக்கசப்பினால் இவ்வாறு பொலிஸாருக்கு அழைப்பு விடுத்து பொய்யான தகவலை வழங்கியிருந்தார் என்று கூறப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## மோதிவிட்டுத் தப்பிய காரை துரத்தி, மடக்கிய பொதுமக்கள்

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மூன்று மோட்டார் சைக்கிள்களை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற கார் ஒன்றைப் பொது மக்கள் துரத்திப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று மாலை 4.45 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் பயணித்த கார் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதி பின்னர் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இதை அவதானித்த பொது மக்கள் காரைத் துரத்திச் சென்று குருநகர்ப் பகுதியில் வைத்து காரை மடக்கிப் பிடித்து யாழ்ப்பாணப் பொலிஸில் ஒப்படைத்தனர். (உ–40)

## எல்லை நிர்ணய அறிக்கையில் ஒப்பமிட்டார் சு.க.பிரதிநிதி

கொழும்பு, ஜன.05

எல்லை நிர்ணய மேன் முறையீட்டுக் குழுவில் அங்கம்பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியான முன்னாள் ஆளுநர் சாலிய மெத்திவ் நேற்று அந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளார்.

எனினும் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சட்டத்தரணி முஸ்தபா சத்தார் அறிக்கையில் இதுவரை கையொப்பமிடவில்லை.

எல்லை நிர்ணய மேன் முறையீட்டுக் குழுவிலுள்ள ஐவரில் மூவர்மாத்திரமே கையொப்பமிட்டிருந்தமையால் அந்த அறிக்கையை உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா முன்னர் ஏற்க மறுத்திருந்தார் என்பது தெரிந்ததே.

## வெளிநாட்டு பிக்குகள் பயணித்த பஸ் கொத்மலையில் விபத்து!

நேபாளத்தில் இருந்து வந்த சுற்றுலாப்பயணிகளின் பஸ் ஒன்று நேற்று பிற்பகல் 3 மணியளவில் விபத்திற்கு உள்ளானதில் 18 பேர் காயமடைந்து கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொத்மலை மகாவெலிசாய விகாரையை தரிசித்துவிட்டு கம்பளை பக்கமாக செல்லும் போது கொத்மலை அணைக்கட்டு பிரதேசத்தில் பஸ் பாதையை விட்டு விலகிச் சென்று மரத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸில் சுற்றுலா பயணிகள் 23 பேர், சாரதி, பஸ் நடத்துனர் ஒருவருமாக 25 பேர் இருந்துள்ளனர்.

காயமடைந்த 18 பேரில் 5 நேபாள பிக்குமார்களும் வியட்நாம் பிக்கு ஒருவரும், 9 பெண்களும் 3 ஆண்களும் அடங்குகின்றனர்.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கம்பளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கீரை விற்ற சிறுமியைத் தாக்கியவருக்கு சந்தையில் விற்பனை செய்வதற்கு தடை

சாவகச்சேரி, ஜன.05

சாவகச்சேரி சந்தையில் கீரை விற்பனையில் ஈடுபட்டு வந்த சிறுமியைத் தாக்கிய பெண் வியாபாரிக்கு சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக சாவகச்சேரி சந்தையில் மலிவு விலையில் கீரை விற்பனையில் ஈடுபட்டு வந்த சிறுமியை மற்றொரு பெண் கீரை வியாபாரி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கிக் காயப்படுத்தியிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் சிறுவர் அமைப்புக்கள், நகரசபை மற்றும் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியமையை அடுத்து வியாபாரத்திற்காக நேற்று சந்தைக்குச் சென்ற சிறுமியைத் தாக்கிய பெண்ணை நகரசபையினர் வியாபார நடவடிக்கையில் ஈடுபட விடாமல் தடை போட்டனர். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உரிய நியாயம் கிடைக்க வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## இந்தியப் பிரஜைக்கு அபராதமும் ஒரு வருட சிறையும்

யாழ்ப்பாணம், ஜன.05

விசா காலாவதியான பின்னரும் நாட்டில் தங்கி நின்று புடவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரி ஒருவருக்கு 50ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 26ஆம் திகதி வல்வெட்டித்துறை கம்பர்மலைப் பகுதியில் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இந்திய வியாபாரி ஒருவர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோட முயன்றுள்ளார்.

இதையடுத்து சந்தேகம் கொண்ட பொலிஸார் அவரைப் பிடித்து விசாரித்தபோது அவருக்கு வழங் கப்பட்ட விசா கால எல்லை முடிவடைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இந்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரம் மன்றில் வாசிக்கப்பட்ட போது நீதிவான் அவருக்கு 50ஆயிரம் ரூபா அபராதத்துடன் ஒரு வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அவற்றை நம்பக்கூடாது என்றும் –

கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு இலங்கைக்கடற்படையிடமே இருக்கும் என்றும் கூறினார் அவர். (உ)

## அம்பாந்தோட்டை துறைமுக விடயம்; மல்வத்தை மகாநாயக்கரின் கருத்து

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக சீனாவுடன் செய்துகொள்ளும் உடன்பாட்டை படித்துப் பார்க்காமல், அதனை ஏற்கவோ நிராகரிக்கவோ முடியாது என்று மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கதேரர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்க சிறிலங்கா அரசாங்கம் எடுத்துள்ள முடிவு தொடர்பாக சமல் ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் நேற்று மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்தனர்.

உடன்பாடுகள் செய்து கொள்ளப்படும் போது வெளிப்படைத் தன்மை அவசியம் என்று மல்வத்தை பீடத்தின் மகா நாயக்கர் வண. திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் தெரிவித்தார்.

முதலில் உடன்பாடுகளை தாம் படிக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு இதன் மூலம் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது என்றும் மல்வத்தை மகாநாயக்கர் குறிப்பிட்டுள்ளார்.

## கிரிக்கெட் முரண்பாடு வாள் வெட்டில் முடிந்தது

### பண்டத்தரிப்பு சாந்தையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.05

பண்டத்தரிப்பு சாந்தை பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை கிரிக்கெட் விளையாட்டின் போது ஏற்பட்ட முரண்பாடு வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்ராசா ஜெனிஸ் என்ற 28 வயதுடைய இளஞன் முதுகில் வாள்வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டின் போது முரண்பட்டுக்கொண்ட இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தகாத வார்த்தைகளினால் திட்டி பொல்லுகளால் தாக்கி, மோதியுள்ளனர்.

இதன்போது வாளுடன் வந்த இளைஞர் ஒருவர் ஜெனிஸ் மீது சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனக் கூறப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் ஐவர் இளவாலைப் பொலிஸாரால் இனங்காணப்பட்டுள்ளனர். தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இளவாலை குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## இன்பருட்டியில் இந்தியப் பிரஜை தங்க பிஸ்கட்டுடன் கைதானார்!

வடமராட்சி, ஜன.05

தங்க பிஸ்கட்டையும், இந்திய நாணயத் தாள்களையும் வைத்திருந்த இந்தியப் பிரஜை ஒருவர் பருத்தித்துறை இன்பருட்டியில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த எஸ்.ரமணன் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் இன்பருட்டிப் பகுதியில் ஓர் இடத்தைசுற்றிவளைத்து தேடுதலை நடத்தினர்.

இதன் போது தப்பியோடிய 43 வயதுடைய இந்தியப் பிரஜையைத் துரத்திப் பிடித்த பொலிஸார், அவரிடமிருந்து ஒரு தங்க பிஸ்கட் மற்றும் ஒரு தொகை இந்திய நாணயத் தாள்களைக் கைப்பற்றினர்.

கஞ்சா கடத்தலுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் இந்த நபரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (40)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.